உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

FREE! (1) How to Enjoy Married Life. (2) How to Make Various Kinds of Scented Hair Oils and Perfumes at Home at a very Cheap Cost.
Please apply at once to:—
S. PAUL & Co., Dept. S. M.
4, Hospital St., Dharamtola CALCUTTA.

மெலிவுற்று
ஆரோக்யத்தை
ஏன் அபிவிருத்தி
செய்து கொள்ளக்கூடாது?

தினசரி இரவு இரண்டு பைல்பீன்ஸ் மாத்திரைகளை தவறாமல் உட்கொண்டு வந்தால், நீங்கள் சந்தோஷமாகவும், வசீகரமாக மெலிவுற்றும், திட ஆரோக்யத்துடனும் இருக்கலாம். பைல்பீன்ஸ் சுத்த தாவர சத்து. இவை சரீரத்தை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்தி செய்து, தினசரி உணவிலுள்ள அனாவசியமான பொருள்களை வெளிப்படுத்திவிடும். இதனால் உங்கள் ஆரோக்யம் அபிவிருத்தியடையும். மேனி அழகுற்று நீங்கள் யௌவனமாகவும், திடமாகவுமிருக்கலாம்.

எல்லா மருந்து வியாபாரிகளும் பைல்பீன்ஸ் பாட்டில் ரூ. 1 வீதம் விற்கின்றனர்.

BILE BEANS

பைல்பீன்ஸ் ஆரோக்யத்தையும், அழகையும் அபிவிருத்தி செய்யும்

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதிகளுக்கு
ஜம்மி வெங்கடரமணய்யாவின்
"லிவர்க்யூர்"
நோட்டீஸ்.
கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்யும் எமது வைத்திய ஆலோசகரை, ஈரல் பெருக்கம், குலைக்கட்டி வியாதிகளுக்கு அந்தந்த தேதிகளில் நேரில் ஆலோசனை பெறலாம்.

ஆலோசனை நேரம் : காலை 9 முதல் 12 மணி வரை.
பிற்பகல் 3-30 முதல் 6-30 வரை.

திருவனந்தபுரம்	— ,,	15 & 16. —	M/S. C. அருணசலம் & கம்பெனி, கெமிஸ்ட் & டிரக்கிஸ்ட்ஸ், புத்தன் சந்தை.
நாகர்கோயில்	— ,,	18.	Mr. N. திரவியம், கெமிஸ்ட்.
திருநெல்வேலி	— ,,	20 & 21. —	"சந்திர விலாஸ்" திருநெல்வேலி ஜங்ஷன்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்,
சப் ஆபீஸ் — கும்பகோணம்.



24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
ரைஸ் மில், மாவு மில், சக்கரைச் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.
சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.
பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மீர்தவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட் போஸ்டு, S.I.R.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தாவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங். Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

நவயுகப் பிரசுரங்கள்

தமிழ்க் குமரி	1	12
திருச்சி ஜெயில்	1	12
பெண்	1	12
கிரஹதாகம் (பாகம் 1)	1	12
ஷ (பாகம் 2)	1	12
மின்சாரத்தின் விந்தை	1	12
மகாராஷ்டிர ஜீவன் உதயம்	1	12
தற்காலத்தமிழ் இலக்கியம்	1	8
இந்தியாவும் பொதுநல சமுதாயமும்	1	8
கட்டபொம்மு	1	8
வின்ஸ்டன் சர்ச்சில்	1	8
பேஸிஸ்ட் ஜடாமுனி	1	8
ஆரம்ப அரசியல் நூல்	1	8
நடைச் சித்திரம்	1	8
மழையும் புயலும்	1	8
உலகம் பலவிதம்	1	4
ஸ்டாலின்	1	4
பாதுகா பட்டாபிஷேகம்	1	4
ஆங்கிலக் கவிதை மலர்கள்	1	0
ஷ பரிசுப் பதிப்பு	1	8
அருள் மொழிகள்	1	0
தமிழ் அறிஞர் முதலியார்	1	0

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor. C. R. Sriniyasan, B.A.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 43 22-11-'42 Price 2 Annas.

சென்றவார நிகழ்ச்சிகள்

ராஜாஜி விளக்குகிறார்

"பரந்த வயலில் தனித்து ஒருவர் மட்டும் உழுது செல்வது போல் தனித்து இப்போது இந்த முயற்சியில் நான் இறங்கியிருக்கிறேன். ஆனால் முயற்சி என்னவோ மிக்க பயனளிக்கக்கூடியதுதான். ஆண்டவன் அருள் மட்டுமிருந்தால், இந்த தனி முயற்சியால் விசேஷ பலன் கிடைக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. அதனால் எனது முயற்சியைக் குலைக்க வழி தேடுவதைக் காணத்தான் எனக்கு பெரிதும் வருத்தமேற்படுகிறது. எனது முயற்சி பலித்தால் சரி, இல்லையானால் போகட்டும், அதனால் ஏற்படக்கூடிய இன்பமோ துன்பமோ ஒருபுறமிருக்கட்டும், ஆனால் எனது முயற்சியை ஆரம்பத்திலேயே குலைக்கப்பார்ப்பதுதான் எனக்கு வேதனையைக் கொடுக்கிறது.

"நான் தனிப்பட்ட ஒரு கட்சி சார்பாகவோ அன்றி குறிப்பிட்ட ஒரு ஸ்தாபனத்தின் சார்பாகவோ இப்போது பேசவில்லை. என் சொந்த சார்பில் தான் பேசுகிறேன்; கவர்னர்-ஜெனரல் இதை விளக்கமாக எடுத்துச் சொன்னார். அது மிகச் சரி. ஆனால் வைஸ்ராய் இந்நாட்டில் எத்தனை பேருக்குப் பிரதிநிதியாக விருந்து பேச முடியுமோ, அதற்கு மேற்பட்ட தொகையினருக்குப் பிரதிநிதியாக இருந்தே நான் பேசுகிறேன் என்பதுமட்டும் உண்மை. இந்தியாவில் வைஸ்ராய்க்கு உள்ள சிநேகர்களைவிட எனக்கு இங்கிலாந்தில் அதிக நண்பர்கள் இருக்கிறார்கள். இங்கிலாந்திலுள்ள பொது மக்களில் பலர் நான் சொல்வதில் நியாயமிருக்கிறது என அபிப்பிராயப்படுகிறார்கள். இந்திய ஸர்க்காரும் பிரிட்டிஷ் ஸர்க்காரும் அறிவோடு நடந்து கொள்ளவில்லையென்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். இவ்வித அபிப்பிராயம் அங்கு வலுத்து வருகிறது; மகாத்மாவைக் காண எனக்கு வைஸ்ராய் அனுமதி அளிக்க மறுத்ததை இந்தியாவில் ஒரு பத்திரிகைகூட ஆதரிக்கவில்லை. கவர்னர்—ஜெனரல் நான் ஒரு அநாமதேயப் பேர்வழி என்று சொன்னதால் ஒருவரும் மயங்க வேண்டியதில்லை.

"காந்திஜியை நான் கண்டால் இப்போதுள்ள நிலைமை கெட்டுவிடுமா? இப்போது நடக்கும் குழப்பங்களும் வைஸ்ராய் அடக்கிவிட்ட கலவரங்களும் அதிகப்பட்டுவிடுமா? தவிர எனது முயற்சி பலித்தாலும் சரி, தோற்றாலும் சரி, அதைப் பற்றி பிரஸ்தாபித்தாலும் சரியே, அவற்றால் இப்போதுள்ள நிலைமை கேவலமடைந்துவிடாது. எனவே வைஸ்ராய் செய்த காரியம் முற்றிலும் அநீதமாகும். நாட்டில் பிரிட்டிஷாரிடம் நல்லெண்ணம் இந்தியருக்கு ஏற்படவும், இப்போதுள்ள சட்டரீதியற்ற முறை மாறி சட்டரீதிப்படிக் காரியங்கள் நடக்கவும் வழி தேடவே நான் இந்த முயற்சியில் இறங்கினேனேயொழிய வேறல்ல. இந்த முயற்சிக்கும் வைஸ்ராய் இடம் கொடுக்க மறுத்ததன் மூலம் அவர் மேற்கொண்டுள்ள லக்ஷியத்துக்கு அவரே பெரும் துரோகம் செய்து விட்டார். வைஸ்ராய் செய்த முடிவு தவறு.

இந்த யுத்தத்தில் பிரிட்டிஷார் வெற்றியடைய வேண்டுமென்பதே என் விருப்பம். அதனால் தான் இதைப்பற்றி இவ்வளவு அழுத்தம் திருத்தமாகப் பேசுகிறேன். காந்திஜியைக் காண எனக்கு அனுமதி மறுத்தது பெரும் தவறாகும். இது நியாயமான காரியம் என ஒருவரும் சொல்லமுடியாது" என்று அலக்ஷியத்தில் பத்திரிகா நிருபர்களிடம் சென்ற வாரம் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் கூறினார்.

* * * * *

ஸ்ரீ ஜயப்பிரகாசர் சிறையிலிருந்து தப்பினர்

ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணரும் மற்றும் ஐந்து ராஜீயச் சிறையாளர்களும் ஹஸாரிபாக் மத்திய சிறையிலிருந்து தப்பி விட்டார்கள். நவம்பர் மாதம் 9-ம் தேதியன்று இவர்கள் சிறையிலிருந்து தப்பிவிட்டதாகவும், இவர்களில் ஸ்ரீ ஜயப்பிரகாசரைப் பிடிக்கத் தகவல் கூறுபவருக்கு 5000 ரூபாயும், பாபு ஜோகேந்திர சுக்கூர், பாபு ராமநந்தன மிஸ்ரா ஆகியவர்களைப் பிடிக்க உளவு கூறுபவருக்குத் தனித்தனி 5000 ரூபாயும், பாபு சூராஜ் நாராயண சிங், பாபு குவாலி சோனார், பாபு சாளிக்கிராம சிங் ஆகியவர்களைப் பிடிக்க உதவுபவருக்குத் தனித்தனி 2000 ரூபாயும் சன்மானமாக அளிப்பதாகவும் பீஹார் ஸர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

* * * *

மிதுனபுரி புயல் கொடுமை

புயல்காற்றினால் பீடிக்கப்பட்ட ஜனங்களின் கஷ்ட நிவாரணத்திற்காக மிதுனபூர் ஜில்லா மாஜிஸ்திரேட் வீட்டில் சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு விஜயம் செய்த மார்வாரி புயல் காற்று நிவாரணக் கமிட்டி கௌரவ காரியதரிசி ஸ்ரீ பாசுதேவகாராட் இவ் விபத்தினால் 40000 பேருக்கு குறையாமல் இறந்திருப்பார்களென்றும் இன்னும் அநேக பிரேதங்கள் இருந்த இடத்திலேயே கிடைக்கின்றனவென்றும் கூறுகிறார்.

* * * *

மன்னர் பிரசங்கம்

பார்லிமெண்டு கூட்டத்தைக் கலைப்பதாகத் தெரிவித்துநேற்று மன்னர்பிரான் செய்த பிரசங்கத்தை லார்டு ஸைமன் படித்தார். மன்னர்பிரான் பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

சுதந்திர லட்சியம் பாதிக்கும்படியாக எந்தவிடத்தைத் தாக்கிய போதிலும் அவ்விடங்களைப் பாதுகாக்கவேண்டுமென்பது நமது உறுதியான நோக்கம். எதிரி பிரதேசத்தில் போரை நடத்தி ஆக்கிரமிப்புக்காளான நாடுகளை துரிதமாக விடுவிக்க வேண்டுமென்பதும் நமது உத்தேசம். யுத்தம் நின்றவுடன் இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட அரசியலை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தில் பரிபூர்ண சுயவாட்சி அளிக்க வேண்டுமென்ற விருப்பத்தை என் ஸர்க்காரும் ஜனங்களும் இந்திய மன்னர்களுக்கும் மக்களுக்கும் தெரிவித்தார்கள். இதற்கிடையில் பிரதிநிதித்துவமுள்ள இந்திய அரசியல் தலைவர்களை இந்திய ஸர்க்காரில் சேர்ந்து யுத்தத்தை நடத்தும்படி அழைக்கப்பட்டனர். ஆனால் இதுவரையில் இந்த யோசனையை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

அமெரிக்க ஜனாதிபதி மனைவி மிஸஸ் ரூஸ்வெல்ட் சமீபத்தில் இங்கிலாந்துக்கு விஜயம் செய்தபோது மன்னருடனும் ராணியுடனும் சம்பாஷித்தார்.

* * * * *

ஆப்பிரிக்க யுத்தத்தின் முக்கியத்துவம்

"மான்ஷன் ஹவுஸி"ல் மேயர் வருஷா வருஷம் நடத்தும் விருந்து இந்த வருஷமும் நடந்தது. இதில் மிஸ்டர் சர்ச்சில் பேசியதாவது:—நம்முடைய யுத்தங்களில் பல சம்பவங்கள் முதலில் பாதகமானவையாக இருந்தாலும் இறுதியான முடிவு எப்பொழுதும் திருப்திகரமாகவே இருந்திருக்கிறது. போன யுத்தத்தில் கடைசி வரையில் நாம் வெகு சிரமப்பட்டுப் போரிட வேண்டியிருந்தது. இந்த யுத்தத்தில் ஏற்பட்டிருப்பதைக் காட்டிலும் இன்னும் கடுமையான விபத்துகளெல்லாம் அப்பொழுது ஏற்பட்டன. ரத்தத்தைச் சிந்தி, கண்ணீரை வடித்து, உழைப்பைக் கொட்டி, வியர்வையைக் கொட்டுவதைத் தவிர வேறொன்றையும் நாம் காணமுடியாதென்று நான் அப்பொழுது கூறினேன். ஆனால் இப்பொழுதோ நம்முடைய அநுபவமே வேறாக இருக்கிறது: இப்பொழுது நமக்கு வெற்றி நிச்சயம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

ரோமலின் ஸைன்யத்தை முறியடித்து விட்டோம்; ஆனால் இதுவே முடிவு அல்ல; முடிவின் ஆரம்பம் கூட அல்ல ஆனால் ஆரம்பம் முடிவுக்கு வந்துவிட்டதென்று சொல்லலாம். இனிமேல் நம்முடைய விமான பலத்தை நாஸிகள் சமாளித்தாக வேண்டியிருக்கும். விமான பலத்தைக் கொண்டு அவர்கள் எவ்வளவு ஈவு இரக்கமின்றி நடந்திருக்கின்றனர்! அதைநினைக்கும்போது பிரஞ்சு அகதிகளின் ஞாபகம் ஏற்பட்டு நெஞ்சம் பதறுகிறது. ஆனால் ஏற்கனவே நமக்கு ஏற்பட்டுள்ள வெற்றி எகிப்தில் தற்காப்பைப் பொறுத்த வரையில் நிச்சயமான ஒரு முடிவைக் காண்பதன் சுபசூசகங்களாகும். மகத்தான வட ஆப்பிரிக்கப் போரின் மூலகர்த்தா ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஆவார். அவருக்கு உதவியாக இருந்து தீவிரமாக ஊழியம் புரிபவன் நான்.

லாபத்துக்காகவோ அல்லது ராஜ்யம் பெறவோ வேண்டுமென்பதை முன்னிட்டோ, நாம் இந்த யுத்தத்தில் இறங்கவில்லை; நமது கடமையைச் செய்யவும் நமது உரிமையைப் பாதுகாக்கவுமே நாம் யுத்தத்தில் இறங்கியிருக்கிறோம்.

ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன். நமது ஸாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதே நமது உத்தேசம். பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யம் சீர்குலைந்து போவதைக் காண்பதற்காக மன்னரின் முதல் மந்திரிப் பதவியை நான் ஏற்கவில்லை. பரந்த ஸாம்ராஜ்யத்தில் நான் ஒரு அங்கத்தினனாக இருப்பதில் பெருமை கொள்ளுகிறேன்.

* * * *

மற்றொரு பிரசங்கம்

காமன்ஸில் யுத்த நிலைமை பற்றிப் பேசுகையில் மிஸ்டர் சர்ச்சில் பின்கண்டபடி பேசினார்:—எகிப்துப் போரில் பிரிட்டிஷாருக்கு முதல் தரமான வெற்றி கிடைத்திருக்கிறது. 8-வதுபடைக்கேவியக்கத் தகுந்த புதிய ஷெர்மன் டாங்கிகளது முதல் கோஷ்டியை அனுப்ப வேண்டுமென்று ஜூன் 20-ந் தேதியன்று ரூஸ்வெல்ட் முடிவு செய்தார். அந்த முடிவை அமுலுக்குக் கொண்டு வர 4 மாதங்கள் அதிக ஊக்கத்துடன் துரிதமாக வேலைசெய்யவேண்டியிருந்தது. எனக்கு எவரும்

(அடுத்த பக்கம் பார்க்க)

மிஸ்டர் சர்ச்சில்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

பிரிட்டிஷ் பிரதம மந்திரியிடம் நல்ல குணம் ஒன்றுண்டு. உள்ளத்தில் உள்ளதை ஒளிக்க மாட்டார். பேசாமல் இருந்திருக்கலாம்; பெரும்பாலும் பேசாமலே இருந்தார். பேசும்போது பொத்திக்கொண்டு வந்து விடுகிறது. இந்தியா சம்பந்தமாக சாதாரணமாக அவர் பேசுவதில்லை. இரண்டொரு முறை தான் பேசினார். பேசாமலிருக்க சமயமும் சந்தர்ப்பமும் இடம் தரவில்லை. பேசினபோது உள்ளதை விண்டு கூறிவிட்டார். ஏகாதிபத்தியக் குட்டையில் ஊறியவர்; பிரிட்டிஷார் உலகத்திற்கு தர்ம கர்த்தாக்கள் என்ற பிரமை; என்ன சோதனை ஏற்பட்டும் பிரமை மாறவில்லை. யுத்தத்தின் மூலகாரணம் என்ன? யுத்தத்தில் கரைகாண வழியென்ன? சாமன்ய அறிவையும் அலற்றும் கேள்விகள் இவை. சர்ச்சிலை ஆத்ம சோதனையில் ஆழ்த்தவில்லை.

தன் கண்ணில் உள்ள தூலம் தென்படவில்லை; பிறர் கண்ணில் காணும் தூசியே உறுத்துகிறது. கடவுள் தன் ஸ்வீகாரப்பிள்ளைகளை கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை. அந்த நம்பிக்கை நெருக்கடியான கட்டத்தைக் கடக்க உதவிற்று. அதே நம்பிக்கை யுத்தத்தில் வெற்றி காணப் போதுமா? போதாது! பிரிட்டிஷார் ஏக தேசத்தில் வெற்றிகாண முடியாது. பிறர் உதவி வேண்டும். பிறர் உதவ, யுத்த சமாதான லக்ஷியங்களில் அவர்களுக்கு நம்பிக்கை வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பதே யுத்த லக்ஷியம் என்றால் அந்த நம்பிக்கை பிறக்குமா? பிறக்காது! சாமான்ய அறிவுக்கும் புலப்படக்கூடிய உண்மை இது. சர்ச்சிலுக்கு புலப்படவில்லை.

மேயர் விருந்தில் சர்ச்சில் பேசியிருக்கிறார். பெருமை பாராட்டிப் பேசியிருக்கிறார். பிறர் நாட்டில் ஆக்கிரமிக்கும் எண்ணம் இல்லையாம். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை கரைக்கும் எண்ணமும் இல்லையாம். ஏகாதிபத்தியத்தின் முக்கிய உருப்பு இந்தியா; இந்தியாவைவிட எண்ணமில்லை என்று தான் படிப்பவர் நினைப்பர். பிடிகொடுக்காமல் பேசி வரும் சூக்ஷ்மம் இது தான் என்று இந்தியர் நினைத்தால் தவறுண்டோ? இந்தியர் குழந்தைகள் அல்ல; ஏமாற்றுவது எளிதல்ல. சமூகவாரியாகப் பிரிந்து நிற்கலாம். மதச் சச்சரவு மலிந்து கிடக்கலாம். ஆனால், எல்லாருக்கும் சுவாதீன வாழ்வில் பற்றுண்டு. சுவாதீனக் குறைவின் சீர்கேட்டை அறியாமலில்லை. சுவாதீனம் பெற ஒன்றுபடவேண்டும் என்பதை அறியாமலுமில்லை. ஒன்றுபடவேண்டிய அவசியத்தையே சர்ச்சிலின் பேச்சு அறிவுறுத்துகிறது. அந்த அளவுக்கு அவரிடம் கடமைப்பட்டிருப்பதாகக் கொள்ளவேண்டும்.

சர்ச்சிலுக்கு ஒரு வார்த்தை. நாட்டுக்கு நெருக்கடியான நேரத்தில் அபார சேவையை செய்து சாதித்தார். அவரால் ஆகக்கூடியது அவ்வளவுதான். ஏகாதிபத்தியத்தைக் காப்பது யுத்த லக்ஷியமென்று யுத்த மத்தியில் சொல்லிக் கொள்வதே வெட்கக்கேடு. யுத்தத்திற்கு பலம் திரட்ட வழி அதுவல்ல. அந்த சங்கல்பம் நிலைத்தால் யுத்தத்தில் காவு கொடுத்ததும் வீணாகும். கால சங்கிரமணத்தினால் ஒரு வேளை வெற்றி கிடைத்தாலும் நிலைக்காது. அன்னியரை அடக்கி ஆளுவது அசட்டுத்தனம். ஆளுவோரும், ஆளப்படுவோரும் ஆண்மை இழப்பது கண்கூடு. சமாதானம் நிலைக்க வேண்டுமானால் தர்மத்தையே அஸ்திவாரமாகக் கொள்ள வேண்டும். விட்டுக்கொடுக்க மனமில்லாதவர் விலகிக் கொள்வதே மேல். பிறந்த நாட்டுக்கு இன்று அவர் செய்யக் கூடிய பணி அதுதான்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(முன் பக்கத்தொடர்ச்சி)

தார்க்குச்சி போட வேண்டியதில்லை. நானே தார்க்குச்சியாக இருக்கிறேன். எகிப்துப் போரில் எதிரிகளுக்கு மகத்தான நஷ்டமேற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் சப்மரீன்களும் விமானப் படையும் சேர்ந்து அச்சுக் கப்பலில் மூன்றில் ஒரு பங்கு வரை மூழ்கடித்தது. தமது ராணுவத்திற்கு ஸப்ளைகள் அனுப்புவதற்கே விரோதிகளின் தங்களது விமானங்களில் பெரும்பாகத்தை உபயோகிக்க வேண்டி வந்தது. ரஷ்யாவில் விரோதியின் விமான முயற்சிகள் சென்ற மூன்று மாதங்களாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்கப் போர் மூலம் விரோதியின் படை பலத்திலும் கோபத்திலும் ஒரு பகுதியை ரஷ்யாவிலிருந்து நம்மீது இழுத்துக் கொள்ள வேண்டி வந்தது.

சென்ற மகாயுத்தத்தில் இழந்ததைவிட பல லக்ஷக்கணக்கான சிப்பாய்களையும் தளவாடங்களையும் ஜெர்மனி ரஷ்யாவில் அதிகமாக இழந்தது. லக்ஷக்கணக்கானவர்களைக் கொன்றும் செயலற்றுப் போகும்படிச் செய்தும் ரஷ்யா பெரிய சேவை செய்து வருகிறது. ரஷ்யாவுக்காக என் மனம் உருகுகிறது. இச் சபையிலுள்ள ஒவ்வொருவரையும் போல தானும் ரஷ்யாவுடன் சேர்ந்து கஷ்ட மனுபவிக்க வேண்டுமென வெகுவாகவிரும்புகிறேன். தங்கள் மீது அளவுக்கு மிஞ்சிய பாரம் விழுந்திருப்பது பற்றி மிஸ்டர் ஸ்டாலின் கூறியது முற்றிலும் உண்மையானது. சென்ற மகா யுத்தத்திலிருந்ததைவிட ரஷ்யா மூன்று பங்கு அதிக சக்தியுடன் விளங்குகிறது.

* * * *

சர்ச்சில்-ரூஸ்வெல்ட் முடிவு

பத்திரிகைப்பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் 'அடுத்த வருஷத்துக்கு முன்னதாக ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்துவது சாத்தியமல்ல என்று மிஸ்டர் சர்ச்சிலும் நானும் முடிவு செய்திருக்கிறோம்' என்று கூறினார்.

* * * *

மகாத்மாவுக்கு ஸ்மட்ஸ் பாராட்டு

இம்மாதம் 13-ந் தேதி இந்திய நிருபர்கள் பேட்டியில் பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் கூறியதாவது:—

நான் இந்தியாவுக்குப் போகவில்லை. இந்திய நெருக்கடியை நிவர்த்திக்கும் முறையில் நான் ஈடுபடப்போவதுமில்லை. அது இந்தியர்களைப்பற்றிய பிரச்னையானதால் அது அவர்களிடையே இருக்கவேண்டும் என்று கருதுகிறேன். அதற்குள்ள பொறுப்பை இந்நாட்டினர்கள் தங்கள் தலையில் அமர்த்திக் கொள்கிறார்கள் என்பதுதான் தற்போதைய நெருக்கடி. இவ் விஷயத்தைப்பற்றி இந்தியர்களே கலந்து அமைதியை நிலைநாட்டவேண்டும்.

காந்திஜீயை "ஐந்தாம் படையைச் சார்ந்தவர்" என்று கூறுவது மூடத்தனம். அத்தகைய வகுப்பினர்களில் அவரைச் சேர்ப்பது தவறு. அவர் 'ஒரு பெரியார், ஆத்மீக லக்ஷியங்களை உடையவர்; அவருடைய கொள்கைகள் நெருக்கடியான இவ்வுலகத்திற்குத் தகுமா என்பது மற்றொரு பிரச்னை.

* * * *

"ஜப்பான் படையெடுக்காது"

இந்திய சமஷ்டி கோர்ட் ஜட்ஜான ஸர் முகமது ஸாபருல்லா கான் நியூயார்க் போகும் வழியில் ராணுவ விமானத்தில் மியாமி வந்து சேர்ந்தார். அவர் அச்சமயம் "ஜப்பான் இந்தியா மீது படையெடுக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இந்தியாமீது ஜப்பான் படையெடுத்தால் நாங்கள் அதற்குப் போதியபடி தயாராக இருக்கிறோம். ஆரம்பமுதல் இந்தியா போரில் கலந்திருக்கிறது. கடைசிவரை இந்தியா போராடும். பாதுகாப்பு ஏற்பாடுகளில் நாங்கள் மிகுந்த முன்னேற்றமடைந்திருக்கிறோமென்று நான் கூறுவேன். எனத் தெரிவித்தார்.

* * * *

ஸ்டாலின் திருப்தி

"ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் நடத்திவரும் போராட்டத்தால் ஐரோப்பாவிலுள்ள ராணுவ—ராஜீய நிலைமை அடியோடு மாறி நேசக் கட்சிக்குச் சாதகமாகியிருக்கிறது. ஜெர்மனியும், இத்தாலியும் விரைவில் குலைய வழியேற்படும்" என்று மிஸ்டர் ஸ்டாலின் தெரிவித்தார். என மாஸ்கோ செய்தியொன்று கூறுகிறது:—

ஆப்பிரிக்கப் போராட்டத்தை பிரிட்டனும், பிரான்ஸும் நடத்தும் வகைப்பற்றி அவற்றை ஸ்டாலின் பாராட்டியதுடன். இதன் மூலம் விரைவில் கிழக்குப் போர்முனையில் ஜெர்மன் தாக்குதலின் வேலை தணியுமென்று தாம் நம்புவதாகத் தெரிவித்தார். யுத்தத்தில் ரஷ்யப் படை தங்கள் பங்கைக் கவனத்துடன் நிறைவேற்றுமென்றும் ஸ்டாலின் உறுதி கூறினார்.

* * * *

(18-ம் பக்கம் பார்க்க)

சீவக சிந்தாமணி-22.

காமனை வரம் வேண்டல்

★

வ. வேணுகோபாலன் எழுதியது

சூரியன் உதயமானான். காமனை வரம கேட்க எண்ணிய சுரமஞ்சரி கோயிலுக்குப் புறப்பட்டாள். அலங்காரம் செய்து திரை போடப்பட்ட வண்டியில் அவள் ஏறிக்கொண்டாள். அவ்வண்டியைத் தோழி ஓட்டிச்சென்றாள். அவளுடன், அந்தணனும் கோயிலுக்குச் சென்றான். நூற்றுக்கணக்கான மகளிர் வண்டியைச் சுற்றிலும் காவல் செய்து சென்றனர். வழியில் ஆடவர் இயங்காதவாறு மகளிர் விலக்கிச் சென்றனர். வண்டி காமன் கோயிலை அடைந்தது. கோயிலுக்கு அருகில் உள்ள காவல் செய்யப்பட்ட மாடத்தில் சுரமஞ்சரி முதலியவர் தங்கி இளைப்பாறினர். தான் வரம் கேட்பதை அந்தணன் அறியக்கூடாது என்று எண்ணினாள். உடனே அந்த மாடத்தில் உள்ள ஓர் அறையில் அந்தணனை இருக்கச் செய்தாள். மாடத்தைச் சுற்றிலும் காவலாகப் பல மகளிரை நிறுத்தினாள். பின்னர் சில தோழியருடன் காமன் கோயிலுக்குச் சென்று வலம் வந்து காமன் வடிவத்தைக் கண்டு வணங்கினாள். மலர்களையும் தீபதூபங்களையும் ஏந்தி நின்று தோழியர் வணங்கினர். பொன்னால் செய்த காமன் வடிவத்தைக் கண்டு சுரமஞ்சரி உள்ளம் பூரித்தாள். இடது முழந்தாளை பூமியில் ஊன்றி, மாலையும் கூந்தலும் வலத்தோளில் வீழ்ந்து புரள, வலத்தே கழுத்தைச் சாய்த்து, பூமியில் தலையைப் பொருத்திப் பணிந்தாள். கைகளை குவித்துக் கண்ணீர் பெருகக் காமனை வணங்கி நின்றாள்; "தாமரைக்கண்ணா. பூமலிமார்பா, யான் ஒரு வரம் வேண்டுகின்றேன். எனக்குச் சீவகசாமியைத் தரவேண்டும். தந்தால் உனக்கு மகரக்கொடி தருவேன். மலரம்புகள் அளிப்பேன்; கரும்புவில் கொடுப்பேன். தேர் முதலியவற்றுடன் ஊர்கள்பல தருவேன்; சீவகசாமியை எனக்குத் தந்து அருள் புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு நின்றாள்.

அப்போது, உடனே காமன் வடிவத்திலிருந்து சில வார்த்தைகள் கேட்டன. "சுரமஞ்சரி நீ உன் காதலனைப் பெற்றாய் வருந்ாதே- இடை வருந்தும்படி இங்கு நில்லாதே போ" என்று அசரீரிபோல் கேட்டன. காமன் வடிவத்திற்குப்பின் மறைந்திருந்த புத்திசேனன் இவ்வாறு கூறினான் என்று சுரமஞ்சரி அறியாள். அவ்வார்த்தைகளை கேட்டதும் சுரமஞ்சரிக்கு மெய் சிலிர்த்தது; அளவில்லாத உவகை எய்தினாள். உடனிருந்த மகளிர் அதிசயித்தனர். 'தனக்கு மனம் இறங்கிக் காமதேவனே வாய் திறந்து கூறினான்' என்று சுரமஞ்சரி உவகை அடைந்தாள். காமனை மீண்டும் மகிழ்வுடன் வணங்கி வலம் வந்தாள். சீவகனை அடைவோம் என்ற உவகையுடன் கோயிலை விட்டுப் புறப்பட்டாள். அந்தணன் தங்கியிருக்கும் மாடத்தை அடைந்து அவனைப் பார்த்தற்குத் தனியே அறைக்குள் சென்றாள். உள்ளே சென்றதும் திடுக்கிட்டு அவள் நின்றாள். முதிய அந்தணன் வடிவத்தைக் காணவில்லை. அழகில் மிக்க அரசிளங்குமரனாகிய சீவகன் உருவத்தையே கண்டாள்; காதல் மிகுதியால் உடல் வியர்த்துச் சோர்ந்தாள். மூப்புருவத்தை நீக்கிய சீவகன் புன்முறுவலுடன் சுரமஞ்சரியின் அருகில் சென்றான். மனம் துணுக்குற்று கடைக்கண்ணால் நோக்கி மேனி வளைந்து நின்றாள். அவள் கண்கள் நாணத்தால் சிவந்தன சீவகனிடம் காதல் மிக்கு உள்ளம் உருகி நின்றாள்.

சுரமஞ்சரியின் நிலையைக் கண்டு சீவகன் புன்முறுவலுடன் பேசலானான். "நங்காய், உன்னை அடையவே நான் இங்கு வந்தேன். உன் பாதத்தைப் புகழ்கிறேன். உன்னைச் சேரேனாயின் என் உயிர் நீங்கும். அருள் செய்வாய்" என்றான். நாணத்தால் மறுமொழி கூறாதிருந்தாள் அவள். சீவகன் அன்புடன் இரு கைகளாலும் அவளைத் தழுவி மகிழ்ந்தான், இனிய தமிழ் கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பத்தை இருவரும் நுகர்ந்தனர். தன்னுடையவிரதம் பயனெய்தியதை எண்ணி சுரமஞ்சரி மகிழ்ந்தாள்.

"சுரமஞ்சரி, நாளைக்கு உன்னை யான் மணம் புரிந்து கொள்கிறேன். நீ வருந்தாதே. அவ்வாறு செய்பேனாயின் யான் கட்டியங்காரன் போல் ஆவேன். உன் மாளிகைக்குச் செல்" என்று சீவகன் கூறினான். 'ஐயன் சொல் தவறான்' என்று ஆறுதல் கொண்டு சீவகனை வணங்கிப் புறப்பட்டாள். தோழியர் சீவகன் சூழ்ச்சியை எண்ணி வியந்து சுரமஞ்சரியுடன் மாளிகைக்குச் சென்றனர்.

சீவகன்மகிழ்ச்சியோடு கோயிலில் மறைந்திருந்த புத்திசேனனிடம் சென்றான். நிகழ்ந்தவற்றை இருவரும் ஒருவருக்கொருவர் கூறிச் சிரித்தனர். சீவகன் திறமையைப் புத்திசேனன் புகழ்ந்தான். பின்னர் இருவரும் தோழரிடம் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறினர். இருவர் திறமையையும் கேட்டுத் தோழர் மகிழ்ந்து புகழ்ந்தனர். "ஐயன் காமதிலகன் என்பதில் ஐயமில்லை" என்று கூறி எல்லோரும் ஆர்த்தனர். நாளைக்கு முறைப்படி மணம் புரிந்து கொள்வதாகச் சுரமஞ்சரியிடம் கூறி வந்ததைத் தோழரிடம் சீவகன் சொன்னான்.

தோழர் நால்வரும் மேல் செய்ய வேண்டியவற்றை ஆலோசித்துச் சுரமஞ்சரியின் தந்தை குபேரதத்தனிடம் சென்றனர். குபேரதத்தன், அவர்களை உபசரித்து, "வந்த காரியம், யாது?" என்றான். "எம் தோழன், சீவகசாமி, சுரமஞ்சரியை மணம் செய்து கொள்ள விரும்புகிறான். அதை அறிவிக்க வந்தோம்" என்று கூறிச் சென்றனர் தோழர். அவர்கள் கூறியதைக் கேட்டு குபேரதத்தன் கவலை கொண்டான். என்ன செய்வதென்று மனம் கலங்கினான். 'சுரமஞ்சரியின் விரதத்தை எவ்வாறு கெடுக்க முடியும்? இச் செய்தியைக் கேட்டால் அவள் என்ன நினைப்பாள்? சீவகனுக்குக் கொடுக்க மறுத்தலும் முடியாத காரியம். பாக்கியம் இல்லாத யான் அபாக்கியவதியான சுரமஞ்சரியின் விஷயத்தில் என்ன செய்வேன்?' என்று எண்ணிக் கவலையுற்றான். பின்னர், தன் மனைவி முதலியவரிடம் நிகழ்ந்தவற்றைக் கூறி ஆலோசித்தான்.

சீவகனை விரைவில் மணம் புரிந்து மகிழ்ந்திருக்கச் சுரமஞ்சரியும் ஆவல் கொண்டாள். தன்விருப்பத்தைப்பெற்றோர்க்கு உணர்த்தி விட எண்ணினாள். தன் உயிர்த்தோழியாகிய கனகபதாகையிடம் விருப்பத்தைப் புலப்படுத்தினாள். சுரமஞ்சரிக்கும் சீவகனுக்கும் காதல் நிகழ்ந்ததை முன்பே அறிந்த கனகபதாகை அச்செய்தியைச் செவிலித்தாயிடம் சொன்னாள். செவிலித்தாய் தான் எண்ணியபடியே நிகழ்ந்ததை நினைத்து மகிழ்ந்து சுரமஞ்சரியின் தாய் சுமதியிடம் கூறினாள்.

சீவகன் விருப்பத்தை குபேரதத்தன் தன்னிடம் கூறியதையும், சுரமஞ்சரியின் கருத்தைச் செவிலித்தாய் கூறியதையும் எண்ணி, சுமதி மனமகிழ்ந்தாள். குபேரதத்தனிடம் சுரமஞ்சரியின் விருப்பத்தை உணர்த்தினாள். "ஐய, நேற்றிரவு ஓர் கனவு கண்டேன். விடியற்காலத்தில் பார்த்தேன். ஆதலால் ஓர் உண்மை புலப்பட்டது" என்று கூறினாள். குபேரதத்தன் வியப்புடன், "என்ன கனவு?" என்றான். "ஒரு பொய்கையில் நீர் வற்றியது" என்றாள் சுமதி. "அதனால், நீ என்ன உண்மை அறிந்து கொண்டாய்?" என்றான் அவன்.

"நம், நங்கை சுரமஞ்சரிக்கு, கன்னித் தன்மை (கன்னிப் பருவம்) நீங்கியது" என்றாள். சற்று வியப்புடன் சுமதியை நோக்கினான் அவன்.

"ஐய, இன்னும் ஒரு மகிழ்ச்சி தரும் செய்தி. சீவகசாமியைச் சுரமஞ்சரி விரும்புகிறாள். அவள் விரதமும் இன்றோடு முடிவுற்றது. இந்நிகழ்ச்சி, பார்

கடலில் தேன் மாரி பொழிந்தது போல நமக்கு மகிழ்ச்சி தருகிறது" என்றாள் சுமதி. தன் எண்ணம் பயனெய்தியதை எண்ணி அவன் மகிழ்ந்தான். உடனே கலியாணத்திற்கு ஆவனவற்றைச் செய்தான். உறவினர்க்கு அச்செய்தியைத் தெரிவித்தான். மணச் செய்தியை அறிந்த யாவரும் மகிழ்ந்தனர். இப்படி, சுரமஞ்சரிக்கும், சீவகனுக்கும் மணம் நிகழ்ந்தது. நூற்றெட்டு மகளிரையும், ஒன்றரைக்கோடி பொன்னையும், மூன்று ஊர்களையும் சீதனமாக அளித்தான் குபேரதத்தன்.

* * * *

சீவகனும் சுரமஞ்சரியும் மனம் களித்துப் பொழுது போக்கி இருந்தனர். முதிய அந்தணன் வடிவம் கொண்டு, தன்னை ஏமாற்றியதைக் கூறிச் சுரமஞ்சரி பரிகசித்து மகிழ்ந்திருந்தாள். அவள் அழகையும் இன்பத்தையும் பாராட்டிப் புகழ்ந்தான் சீவகன். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. பூம்படுக்கையில் இருவரும் பேசியவண்ணம் இருந்தனர். அவளுக்குச் சிலவற்றைக் கூற எண்ணிய சீவகன், "நங்காய், சில நாட்கள், உன்னைப் பிரிந்திருப்பேன். அதற்கு நீ வருந்தாதே; பிரிவுக்கு மனம் வருந்தினால் மேனி இளைக்கும்; அதனால், உன் அழகும் கெடும்; அவ்வாறு வருந்தாதே. அழகு என்பது பெறுதற்கு அரியது. மிகவும் போற்றற்கு உரியது" என்றான். சீவகன் உள்ளத்தையும், இயல்பையும் அறிந்த சுரமஞ்சரி, அதற்குச் சிறிதும் வருந்தவில்லை. சீவகனை அன்போடு தழுவிகொண்டு "ஐய, யான் விரும்புவது வேறு ஒன்று உண்டோ? நுமது மனம்போல் யான் நடந்துகொள்பவள்; ஆதலால் உமது மனம் விரும்புவதையே என் மனமும் விரும்பும்; உம் பிரிவைக் காத்துக்கொள்வேன்" என்று கூறினாள்.

"நங்காய், உன் அழகு வருந்தும்படி, நீண்ட நாட்கள் பிரியேன். விரைவில் உன்னைச் சேர்வேன்" என்று கூறினான். பின்னர் அவளைத் தழுவி விடைபெற்றுத் தோழர் இருக்குமிடம் சென்றான். தோழர்களுடன் கந்துக்கடன் மாளிகைக்குப் போனான்.

* * * *

சீவகன் பிரிவுக்குக் கந்துக்கடன் வருந்தவில்லை. முனிவர் கூறிய மொழியால் கவலையின்றி இருந்தான். அவன் மனைவி, சுநந்தை மனம் பொறுக்காதவளாய் சீவகனை எண்ணி வருந்தியிருந்தாள். சீவகன் இளமைப் பருவத்தில், போர்த்தொழில்பழகிய யானை, குதிரை, தேர் முதலியவற்றைப் பார்த்து, "இவற்றை விட்டு என்மகன் எங்கே, சென்றான்? எங்கே இருக்கிறான்?" என்று பிதற்றிப் பொழுது போக்கியிருந்தாள். சீவகன் பிரிவால் அனலில் இட்ட மெழுகு போல், சுநந்தையின் உள்ளம் உருகியது. இவ்வாறு சுநந்தை வருந்தியிருக்கும் போது, சீவகன் அங்கு வந்தான். கட்டியங்காரனுடைய ஒற்றர்கள், உணராதவாறு, தன் வரவை வாயாலுரைக்காமல் குறிப்பால் அறிவித்தான். சுநந்தை சீவகனைக் கண்டதும் தழுவிக் கவலை நீங்கி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். சீவகனை அணைத்து இனிய வார்த்தைகளைக் கூறிக் கந்துக்கடன் மகிழ்ந்தான். சீவகனுடன் பழகிய மற்றவர்கள், கன்றைக் கண்ட தாய்ப்பசுவைப் போல் அவனைக் கண்டு அகமகிழ்ந்து ஆரவாரித்தனர், உவகை மிகுதியால் யாவரும் கண்ணீர் சொரிய அழுதனர். ஒருவரை ஒருவர் மகிழ்ச்சியால் அடித்துக் கொண்டு "நம்பியோ; நம்பியோ" என்று கூறிக் கூத்தாடினர், 'சீவகன் வரவைக் கட்டியங்காரன் அறிந்து விடுவான்' என்று கந்துக்கடன் அஞ்சினான் உடனே எல்லோரையும் நோக்கி, "அழுது ஆரவாரம் செய்தால் ரகசியம் வெளிப்படும், பேசாதீர்" என்றான். அழுகையும் ஆரவாரமும் உடனே அடங்கியது. நடந்ததை மறைத்தற்கு எண்ணி "எம் தந்தையார் இறந்த நாள் இன்று வந்தது" என்று கூறி அழுதனர். பின்பு, அழுகையை நிறுத்திச் சீவகனோடு அளவளாவியிருந்தனர்.

சீவகன், எல்லாருடனும் பேசியபின், காந்தருவதத்தையிடம் சென்று அவளோடு மகிழ்ந்திருந்தான். காந்தருவதத்தை சீவகனைக் கண்டு உள்ளம் குளிர்ந்தாள்; "ஐய, என் தங்கை, குணமாலை நும் பிரிவால் வருந்தியிருக்கிறாள். அவளைக் கண்டு மகிழ்விக்கவேண்டும்" என்று விருப்பமுடன் கூறினாள். குணமாலையிடம் அவளுக்குள்ள அன்பையும் இரக்கத்தையும் கண்டு சீவகன் மகிழ்ந்தான். உடனே குணமாலையின் மாளிகைக்குச் சென்றான். குணமாலை சீவகனைக் கண்டதும் மகிழ்ந்து வணங்கினாள். தான் கொணர்ந்த பூமாலை முதலியவற்றை அவளுக்கு அணிந்தான் சீவகன்; குணமாலையைத் தழுவ அருகில் சென்றதும் அவள் கோபித்து அகன்று நின்றாள்.

"ஐயனே, தீவினை உடைய என்னைத் தொடவேண்டாம்; யான் மிகவும் பாவம் செய்தவள்" என்று கூறி அழுதாள். தன்னைத் தீண்டியமையால் சீவகன் கொலையுண்டான் என்று உலகம் கூறுவதை எண்ணி உள்ளம் நொந்தாள்; கண்ணீர் பெருக விம்மி நின்றாள். "நங்காய், வருந்தாதே; உன்னுடைய நல்வினைப்பயனால் தான் எல்லாத் துன்பங்களிலிருந்தும் யான் தப்பினேன். உன்னைப் பிரிந்திருந்த காலமெல்லாம் உன் உருவத்தை என் மனத்தில் நிறுத்தியிருந்தேன். உன்னைத் தழுவாமல ஒவ்வொரு நாளும் ஓர் ஊழிக் காலமாயிருந்தது. இன்னும் என்னை வருத்தாதே" என்று அவளைச் சீவகன் தழுவினான். கோபம் நீங்கிக் குணமாலையும் மகிழ்ந்திருந்தாள். அன்று குணமாலையுடன் இருந்தான்.

மறுநாள், மேல் செய்ய வேண்டிய காரியங்களை எல்லோரிடமும் கூறிவிட்டுத் தோழருடன் புறப்பட்டான். பிறா அறியாமலிருத்தற்குக் குதிரை வாங்கும் வாணிகனாக வேஷம்கொண்டான். தோழர்களும் வீரரும் சூழத் தன் மாமன், கோவிந்தராசனுடைய விதைய தேசத்தை நோக்கிச் சென்றான்.

அடுத்தவாரம்—
திரிபன்றி யந்திரம்

பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி கேசவர்த்தினியைக்கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க்கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால் கூந்தலையோ வித விதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு 'முன்னர்' கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகுபடுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலை காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணா 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

நரையை ஒழியுங்கள்.
தலைமயிர் நரைத்திருக்கும்பொழுது டாக்டர் அம்ருடைய கரை பிடிக்காததும் இயற்கையானதுமான தந்நக் கறுப்பு சிறந்தது. ரிஜிஸ்டர் நெ. 1998. எங்கும் விற்பனை செய்யப்படுகிறது.
APPAH & CO., Madras.
N. DASAI GOUNDER,
Coimbatore.

FREE! (1) How to Enjoy Married Life. (2) How to Make Various Kinds of Scented Hair Oils and Perfumes at Home at a very Cheap Cost.
Please apply at once to:—
S. PAUL & Co., Dept. S. M.
4, Hospital St., Dharamtola CALCUTTA.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு

அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட் போஸ்டு, S.I.R.

டோங்ரே
பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

இதை ஜம்மியின் லிவர்க்யூர் தான் குணப்படுத்த முடியும்
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களுக்கு "லிவர்க்யூர்" இதுவரை தெரிந்துள்ள நிச்சயமானதும், பயமற்றதுமான மருந்து.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ். 1/1, பிராடீஸ் ரோட் மைலாபூர், மதறாஸ்,
மற்றும்:- பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

அ. இ. கா. கமிட்டி

பண்டித ஜவஹர், மஹாத்மாஜி, ஆச்சார்ய கிருபாளினி முதலியோர் உட்கார்ந்திருக்கின்றனர்.

காரியக் கமிட்டியின் தீர்மானம் காங்கிரஸ் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. மிகச் சிலரே ஆக்ஷேபித்தனர். 100-க்கு 5 பேர்கூட எதிராக ஓட்டுப் பதிவு செய்யவில்லை. தீர்மானத்தைப் பண்டித ஜவஹர் பிரேரித்தார். மிக அடக்கமாகவும் வெகு உருக்கமாகவும் பேசினார். 'பயமுறுத்துவது நோக்கமல்ல, பலம் காட்டுவதே நோக்கம்' என்றார். 'சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளுங்கள், ஒத்துழைக்கவே மன்றாடுகிறோம்' என்றார்.

அவசரக் கோலம்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

தீர்மானம் பிரேரிக்கப்படுமுன்பும் நிறைவேறிய பின்பும் மகாத்மா பேசினார். மனம் விட்டுப் பேசினார். மனச்சாக்ஷியை மதித்துப் பேசினார். மனம் கசியப் பேசினார். கோபமோ தாபமோ காணவில்லை. பேச்சிலே உறுதியிருந்தது; ஆனால், அவசரப்படப் போவதில்லை என்றார். விட்டுக் கொடுக்க ராஜப்பிரதிநிதியை வேண்டப் போவதாகச் சொன்னார். கடிதம் எழுதி, பதில் கிடைக்கக் காத்திருக்கப் போவதாகச் சொன்னார்.

கவர்ன்மெண்டார் காத்திருக்கவில்லை. தீர்மானம் நிறைவேறியது தான் தாமதம், தீர்மானத்தைக் கண்டித்து உடனே அறிக்கையொன்று வெளியாயிற்று. மாமூல் வாதங்கள் மலிந்து கிடந்தன. காங்கிரஸ் கொண்டாடிய பாத்தியதையைப் பழித்தனர். தேச முன்னேற்றத்தை காங்கிரஸ் தடுத்து வருவதாகச் சாதித்தனர். காங்கிரஸ் பிடியிலிருந்து தேசத்தைக் காப்பாற்றுவதாகக் கிளம்பினர்.

மகாத்மா காந்தி, காங்கிரஸ் தலைவர், காரியக்கமிட்டி அங்கத்தினர்கள், மற்றும் பல தலைவர்கள் எல்லாரையும் கைது செய்துவிட்டனர். காங்கிரஸ் காரியக்கமிட்டி, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள், எல்லாவற்றையும் சட்ட விரோதமான ஸ்தாபனங்கள் என விளம்பரப்படுத்தி விட்டனர். இன்னும் என்னென்ன நடக்கப்போகிறதோ தெரியவில்லை. ஒன்று மாத்திரம் தெளிவு. காங்கிரஸின் சக்தியையும் செல்வாக்கையும் அடக்க எதையும் செய்யத் தீர்மானித்து விட்டனர்.



அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் தலைவர் மௌலானா அபுல் கலாம ஆஸாத் பிரசங்கம் புரிகிறார்.

கவர்ன்மெண்டார் இப்படி அவசரப்பட்டிருக்க வேண்டுமா என்பது முதல் கேள்வி. நிலைமையை முற்ற விடாமல் தவிர்க்கப் பலர்பிரயாசை எடுத்து வந்தனர். அதிகாரம் கவர்ன்மெண்டின் கையில் என்றைக்கும்இருக்கிறது. சற்று பொறுத்திருந்தால் என்ன மிஞ்சி விடும்? கவர்ன்மெண்டார் திடீரென நடவடிக்கை எடுத்தார்களே, அதன் பலா பலன்களை ஆற அமர யோசித்தார்களா? அடுத்த கேள்வி அது. யுத்த நெருக்கடி முற்றி வருகிறது. எல்லோருடைய உதவியும் தேவை. யாருடைய உதவியையும் உதாசீனம் செய்வதற்கில்லை. எடுத்த நடவடிக்கை யுத்த முயற்சிக்கு பலம் கூட்டுமா, குறைக்குமா? மூன்றாவது கேள்வி அது. ஸாரமுள்ள கேள்விகள்; பதில் சொல்லத் தேவையில்லை.

கேட்பது சுதந்திரம். சுதந்திரத்தை நிலைநாட்டவே போர் நடந்துவருகிறது. சுதந்திரத்தை மறுப்பதற்கில்லை. கொடுப்பதில் தாமதம் தான் கவலையளிக்கிறது. நம்பிக்கையில்லை. கிரிப்ஸுடன் பேசியபோது அவ நம்பிக்கை வெகு தூரம் கரைந்தது. ஒரு அற்ப விஷயத்தில் அபிப்பிராய பேதம் எஞ்சி நின்றது. சற்று பொறுமை காட்டியிருந்தால் அதுவும் சல்லிஸாகத் தீர்ந்திருக்கும். தீராமல் பேச்சு முறிந்தது. விரஸம் வளர்ந்தது. மீண்டும் முயற்சித்திருக்கலாம். கௌரவ பங்கம் ஏதுமில்லை. காரியம் பெரிது; வீரியமல்ல. கவர்ன்மெண்டார் பதறிவிட்டனர்.

அதிகாரம் உள்ள அளவு அடக்குவது எளிது. செல்கிற வரையில் தான் அது செல்லும். காரியத்தை அடக்கலாம்; கருத்தை அடக்க முடியுமா? காங்கிரஸ் கோரியது சுதந்திரம். காங்கிரஸின் ஏகபோக உரிமையல்ல அது. மக்கள் அனைவரும் வேண்டுவது. எல்லோருக்கும் தீவிர நடவடிக்கைகளில் பற்றோ, பிரசக்தியோ இல்லாமலிருக்கலாம். பொறுமை காட்டலாம் சிலர்; நம்பிக்கை கொள்ளலாம் சிலர். இவர்களின் ஆதரவு நிலைக்க வேண்டுமானால் அடக்குமுறை மாத்திரம் உதவாது. தீவிர நடவடிக்கையில்லாமலே காரியம் கூடும் என்பதை மெய்ப்பிக்க வேண்டும்.

யுத்த நிலைமையில் நேச நாடுகளுக்கும் இதில் சிரத்தை உண்டு. கேவலம் பிரிட்டிஷ் இந்தியப் பிரச்னையாகப் பாவிப்பதற்கில்லை. யுத்தத்தில் வெற்றி காணவே இந்தியாவை ஒரு தளமாகக் கருதுகின்றனர். அன்னியத் துருப்புகளும் குவிந்து வருகின்றன. எவ்வளவு படைபலம் இருந்தாலும் தேசமக்களின் பரிபூர்ண ஆதரவு வெற்றிக்கு அவசியம். வெற்றியே உலக முழுவதும் சுதந்திர வாழ்வைக் காக்கும். ஆகையால், வெற்றிக்குள்ள சகல சாமக்கிரியைகளும் தேவை. தேவையெல்லாம் பூர்த்தியாகி வருகிறதாவென்பதை நேச நாட்டினர் கவனிக்கவேண்டும். என்ன செய்யப் போகிறார்கள்?

வாடா மலர்

முன் கதைச் சுருக்கம்

பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் சாத்தன்: வெளி நாடுகளுடன் வர்த்தகம் நடத்தி வந்தான் அவன். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற மூதுரையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தவன். யவன தேசத்திற்கு அடிக்கடி சென்று வந்தான். அவன் பார்ப்பதற்கு வசீகரத்தோற்றம் உள்ளவன்: அலக்ஜாந்திரியாவில் அவன் ஒருத்தியைக் கண்டான்: அது முதற்கொண்டு அவனது உள்ளம் அவளிடத்தே ஈடுபட்டு விட்டது. அங்கு அண்டியோகஸ் வீட்டில் தான் கொணர்ந்த பொருளை விற்க விலை பேசுகையில் அழகு மிகுந்த அந்தோனியாவை அவன் கண்டான். இருவரும் ஒரு க்ஷணம் ஒருவரையொருவர் நன்கு நோக்கினர். வெகு சீக்கிரத்தில் இருவரிடையே அந்நியோந்நியம் பிறந்து விட்டது. அவள் ஞாபகமாகவே சாத்தன் தாயகம் திரும்பினான். அவனுக்கு அவளை எப்போது மறுபடி காண்பது என்பதே ஏக்கம்: அவளுக்கு அவன் எப்போது திரும்பி வருவான் என்பதே விசாரம். மறுமுறை காதலன் வந்து அவளைத் தமிழ் நாட்டிற்கு அழைத்து வந்துவிட்டான். இதனால் அண்டியோகசுக்கு மிகவும் கோபம்; தமிழ்ப் பூண்டை ஒழித்துவிடவும் அவனுக்கு அதிக ஆசை: படையெடுக்கவும் விரும்பினான் அவன்: பணஞ் செலவழிக்க அவன் தயங்கவில்லை: இந்த சமயத்தில் அந்தோணியா சொக்கநாதர் கல்லானை உத்சவத்தில் கலந்து கொள்ளப்போய் தனிமையில் வேதனைப்பட்டாள்.

இதன் பின் மேலே படியுங்கள்!

4

'வைத்தியர் என்ன சொல்லி விட்டுப் போனார்?'

'சுரம் படிந்து கொண்டு வருகிறது இனி பயமில்லை. இன்னும் இரண்டு தினங்களில் ஸௌக்கியம் ஆகிவிடும் என்றார்.'

'உம்' என்று ஒரு பெருமூச்சு விட்டுப் படுக்கையில் திரும்பிப் படுத்தாள் அந்தோனியா.

'வீணாக உடம்பை அலட்டிக் கொள்ளாதே' என்று ஆசை ததும்பும் குரலில் கூறிய சாத்தன் மெதுவாக அவளைச் சரியாகப் படுக்க வைத்து 'நீ இவ்விதம் அடிக்கடி புரளுவதால்தான் உடம்பில் வலி ஏற்படுகிறதென்று வைத்தியர் சொல்லுகிறார் இப்படியே படுத்துக் கொண்டு இரேன்' என்று சொன்னான்.

'ஆமாம் ஆறுமாதமாகத்தான் வைத்தியம் செய்கிறார்: ஒரு குணத்தையும் காணோம்' என்று வெறுப்புத் தோன்றும் குரலில் தனக்குத்தானே பேசிக்கொண்டாள் அந்தோனியா சிறிது நேரம் பொறுத்து, 'மார்க்கஸ் என்று எங்கள் தேசத்து வைத்தியர் ஒருவர் வந்திருக்கிறாராமே. அவரை அழைத்து வந்து காட்டுங்களேன். ஒருகால் அவராகிலும் ஏதாவது செய்ய முடியுமா, பார்க்கலாம்' என்றாள்.

சாத்தன் நினைத்தபடி நேரிடுவதைக் கண்டு திடுக்கிட்டான்.

"நேற்றே அவரைக் கூப்பிட்டிருக்கிறேன். இப்போது வருவார். அவர் வருகிற சமயமதான்" என்று சொன்னான்.

ஆனால் அந்தோனியா அதைக் காதில் வாங்கிக்கொள்ளாதவள் போல 'யார் வந்து தான் என்ன? கடவுள் கண் திறந்து என்னைச் சீக்கிரம் அழைத்துக்கொண்டு போய்விட்டால் போதும்' என்று அலுத்துக் கொண்டாள்.

அந்தோனியா ஆறுமாதகாலமாகப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள் சாத்தன் அவளுக்குப் பார்க்காத வைத்தியம் இல்லை. ஆனால் அவளைப் பீடித்திருக்கும் நோய் என்னவென்பதே ஒருவருக்கும் பிடிபடவில்லை.

வைத்தியர்களையோ அவர்கள் கொடுத்து வந்த மருந்தையோ குறைகூற முடியாது. அவர்கள் வியாதியின் தன்மையை அறிந்தே மருந்து கொடுத்தார்கள். மருந்தும் அதன் குணத்தைக் காண்பித்து நோயைப் போக்கும். ஆயினும் இரண்டு தினங்களுக்கெல்லாம் மறுபடியும் அந்த வியாதி முருங்கை மரத்தில் ஏறும் வேதாளத்தைப் போல் வந்து பிடித்துக் கொள்ளும்.

உடற் பிணியை வைத்தியனைக்கொண்டு சிகிச்சை செய்துவிடலாம்; ஆனால் மனோ வியாதியோ அவ்விதம் அன்று. அந்தோனியாவுக்கு ஏற்பட்டிருப்பது மனோ வியாதியே, என்று சாத்தன் நன்றாக அறிந்து கொண்டான். ஆனால் அது எதைப்பற்றியது, எத்தகையது, என்பதை அவன் அறியவில்லை.

சாத்தன் பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்திப் பார்த்தான். அவளுக்கு எந்த விதமான மனக்குறை ஏற்பட்டிருக்கக்கூடும் என்று ஆராய்ந்தான். ஆயினும் அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை.

அன்றொரு நாள், ஆறுமாத காலத்துக்கு முன்பு, கல்லானைக்குச் சொக்கர் கரும்பு அளிக்கும் உற்சவத்திலிருந்து சாத்தன் தன மாளிகைக்குத் திரும்பி வந்ததிலிருந்துதான் இது ஆரம்பமாயிற்று. அதற்கு முன்னர் அவர்கள் காலம் இன்பமாகக் கழிந்து வந்தது.

மதுரைக்கு வந்த புதிதில் அவர்களது வாழ்க்கை இளமையும் மோகமும் கொண்ட ஆனந்த வெள்ளத்தில் மிதந்து சென்றது. அவர்கள் அதனுள் மூழ்கி விளையாடித் திளைத்து வந்தனர். ஆனால் காலம் மாறிக்கொண்டே போகும் தன்மை வாய்ந்ததன்றோ?

வியாபாரத்தில் ஏற்பட்ட லாபம் மன்னனுக்காகத் தூது சென்றதில் கிட்டிய காரிய சித்தி, எதிர் பாராமல் கிடைத்த கருயாரகதினம், ஆகியவை அவனை மயக்கின. அந்தோனியாவின் மோக வலையில் சிக்குண்டிருந்த சாத்தன் உலகத்தை மறந்தே போனான். ஆயினும் எவ்வளவு நாள் அப்படி இருக்க முடியும்? குலத் தொழிலான வாணிபத்தை அவன் கவனிக்கா விட்டாலும், அதன் விளைவாக உண்டான அரசாங்கக் காரியங்களை அவன் அலட்சியம் செய்ய முடியுமா? மையலின் புதுமை நீங்கியதும் அவன் சிறிது சிறிதாக வெளிக் கிளம்பித் தன் காரியங்களைப் பார்க்கலானான்.

சாத்தனிடமிருந்து பிரிந்து கண நேரமும் தனியாக இருக்க மனங்கொள்ளாத அந்தோனியா காட்டு மரத்தைச் சுற்றிப் படரும் கொடியே போல அவனைத் தொடர்ந்து உடன் சென்று வந்தாள். சாத்தனைக் காணுமிடங்களில் அந்தோனியாவையும் காணலாம்.

புதிய தொடர் கதை

அந்தோனியாவின் நடத்தை தமிழர்களுக்கு விரோதமாகத் தோன்றியது. ஆரம்பத்தில் அவர்கள் அந்த நவநாகரிகக் கோலத்தைக் கண்டு வியந்தனர். ஆயினும் கொஞ்ச காலத்திற்கெல்லாம் அது வெறுப்புத் தட்டியது. 'அவள் வெளிநாட்டவள், ஆதலால் அவளுக்கு அது குற்றமாக இராமல் இருக்கலாம். ஆனால் அந்தப் பழக்கம் தங்களிடையிலும் பரவிவிட்டால் என்ன செய்வது?' என்ற பயமும் அவர்களுக்கு ஏற்பட்டது போலும்.

தமிழ்ப் பெண்கள் அடிமைகளைப்போல அடுப்பங்கரையை விட்டு வெளியே வராமல் உள்ளேயே அடைத்துக் கிடக்கவில்லை. எனினும் அவர்கள் புருஷர்களுடன் இரண்டறக் கலந்து பழகவில்லை. ஆண், பெண் ஆகியவர்களுக்கிடையே மெல்லிய திரை போன்ற விலக்கு ஒன்று இருக்கவே இருந்தது.

அன்றி அவள் ஆடை அணிந்திருந்ததும் புதிய முறையாக இருந்தது. தன் மேனியழகை வெளிக்காட்டுவதற்காகவே அவள் அவ்விதம் உடுத்திருந்தாள் என்றே மக்கள் எண்ணலாயினர்.

தி. நா. சுப்ரமணியம் எழுதியது

அந்தோனியாவுக்கு இந்த விஷயம் அதிக நாள் மறைமுகமாக இருக்கவில்லை. போதை கொண்டவர்களைப்போல ஜனங்கள் தன்னை வெறுத்து நோக்கும் பார்வையில் அவள் உண்மையை அறிந்துகொண்டாள். தன் பழைய வழக்கங்களை உதறித் தள்ளிவிட்டுத் தமிழ் நாட்டவர்களுள் ஒருத்தியாகவே தன்னைச் செய்துகொள்ள முயன்றாள். தமிழ்ப் பெண்போலவே உடுத்துப் பேசி நடந்து வந்தாள். எனினும் அவற்றை வேறுபாடு இல்லாமல் அவளால் கையாள முடியவில்லை. முக்கியமான சமயங்களில் அவை அவளைக் காட்டிக் கொடுத்துவிட்டன.

கரும்புத்திருநாளன்று நாட்டுப்புறத்துப் பெண்கள் அந்தோனியாவைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தது அவள் மனத்தில் நன்கு தைத்தது. அவர்கள் தன்னைப் பாண்டிய மன்னன் அரண்மனையில் ஏவல் தொழில் புரியும் பணிப் பெண்களுள் ஒருத்தியாக மதித்துவிட்டனரே என்ற துக்கந்தான் அவளைப் பெரிதும் வாட்டியது.

தமிழ் மக்களுக்கு யவனப் பெண்களைப்பற்றி அதிகமாகத் தெரியாது. தங்கள் நாட்டுக்கு வந்த பெண்களைப்பற்றித் தெரிந்துகொண்டனவே அவை. அவர்கள் இங்கே வந்து அரசன் அந்தப்புரங்களுள் புகுந்து சேவகம் புரிந்து வந்தனர். யவன வீரர்களும் அதேபோலத் தமிழ் நாட்டு அரண்மனைகளில் கத்தியும் கேடயமும் தாங்கிக் காவல் புரிந்து வந்தனர் அவர்கள் ஊர் புறத்தே தனியாக யவனச்சேரியில் வசித்து வந்தனர். வாணிபத்துக்காகத் தங்கள் நாட்டை விட்டுத் தமிழ்நாடு வருபவர்களும் உண்டு. அவர்களும் அந்தச் சேரியிலேயே தங்குவர்.

பிறருக்குத் தலை வணங்காத ரோம ஸாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் இவ்விதம் தமிழ்நாட்டில் கைகட்டிக் குற்றேவல் புரிவது அந்தோனியாவின் ஹிருதயத்தைப் பிளந்தது யவனர்கள் தங்கள் மதிப்பை இழந்துவிட்டனரா இத்தகைய இழி தொழிலைச் செய்வதற்கு? அல்லது பாண்டிய அரசு ரோம ஸாம்ராஜ்யத்தைத் தலை குனியச் செய்துவிட்டதா? தங்கள் பெண்களுக்கு இழைக்கப்படும் இவ் வநீதியை யவன ஸாம்ராஜ்யத்தின் அதிபதிகள் தடுக்க முடியாதா? இவ்விதம் யோசித்தாள் அந்தோனியா.

ஆனால் அவள் முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டாள். தமிழ் நாட்டிலே சேவகம் செய்துவந்த யவனர்கள் யாவரும் சுதந்திரம் வாய்ந்தவர்கள் அல்லர் அவர்களும் பெரும்பாலோர், சுதந்திரத்தை இழந்து நாடு கடத்தப்பட்டவர்கள், ஆசியாவின் மேற்குப் பகுதியின் ஐரோப்பாவின் கிழப் பிரதேசம், எகிப்து முதலிய இடங்களினின்றும் விலைக்கு வாங்கியும் கூட்டிய அடிமைகள். அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் ஆகியவர்களே.

எனினும் அதனால் தங்கள் ஜாதிக்கு ஏற்படும் அகௌரவத்தை அவளால் மறக்க முடியவில்லை. இந்த அவமதிப்பு ஒருநாள் தன் பெருமையைக் குலைத்துச் சமூகத்தின் அடிப்படையையே அசைத்துவிடக் கூடும் என்பதை அதிபதிகள் உணரவில்லையே என்று வருந்தினாள்.

அந்தோனியா இவ்விதம் உற்சாகம் குன்றி, உடைந்த உள்ளத்துடன் கிடந்தாள் ஆனால் சாத்தனோ அவள் உள்ளத்தை அறியாமல் உடற்பிணியைப் போக்க வைத்தியம் செய்துவந்தான்.

அவன் எதிர்பார்த்திருந்தபடியே யவன வைத்தியன் மார்க்கஸும் அந்தச் சமயம் வந்தான். அந்தோனியாவின் உடல் நிலையை நன்றாகப் பரிசோதித்தான். அதுவரையில் செய்துவந்த வைத்தியத்தையும் விவரமாகக் கேட்டறிந்தான். ஆயினும் அவன் ஓர் அபிப்பிராயமும் கூறாமல் அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

வைத்யருடைய முகத் தோற்றத்தைக் கொண்டே நோயாளியின் நிலைமையை அறிந்து விடலாம். மனத்திற்குப் பயமளிக்கக்கூடிய விஷயங்களை அவர்கள் வாய்விட்டுச் சொல்லக்கூடாது. அது அவர்கள் தொழில் முறை. ஆயினும் அவர்கள் உள்ளத்தே தோன்றும் எண்ணங்களை முகம் காட்டிவிடும் அவற்றை மறைக்க முடியாது.

அவருடைய முகத்தைப் பார்த்ததும் சாத்தனுக்கு உண்மையில் பயம் ஏற்பட்டுவிட்டது. "அந்தோனியா ஒருகால் பிழைக்க மாட்டாளோ?" என்று ஏங்கினான்.

மார்க்கஸ் யவன வைத்தியனானாலும், இந்திய மருந்துவ முறையையும் நன்றாக அறிந்தவன். அதனை முழுமையும் கற்றுப் போகவே தமிழ் நாட்டுக்கு வந்திருந்தான். பச்சிலைகளையே பிரதானமாகக் கொண்ட ஆயுர்வேதத்தை எல்லாத் தேசங்களிலும் பயிலமுடியாது. சில மூலிகைகள் இந்நாட்டிலேயே வளரும். அவை கிடைக்காத காலங்களில் அவற்றின் குணத்தையுடைய உலோக சத்துக்களைக் கொடுக்க வேண்டும்.

தமிழ் நாட்டிலே அத்தகைய முறை வெகுநாளாக இருந்து வருகிறது; அதை அறிந்து போகவே வந்தவன் மார்க்கஸ்.

"இது ஹிருதய சம்பந்தமான நோய் என்று எனக்குத்தோன்றுகிறது. கொஞ்சகாலம் வேற்றிடத்திற்கு அழைத்துச் சென்று சிச்ருஷை செய்து பார்த்தால நலம். வேறு புதிய மருந்து ஒன்றும வேண்டியதில்லை என்று எண்ணுகிறேன்' என்று திடமான குரலில் அவன் சொல்லிவிட்டான்.

மார்க்கஸ் கூறிய சொல் சாத்தனைப் பேயறை போலச்சென்று தாக்கியது. அவன் முகம் வெளுத்தது. அவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு பதில் சொல்ல ஆரம்பித்தான். அதற்குள் 'வேலையாள்வந்து' அரணமனையிலிருந்து ஆள் வந்திருக்கிறான். அரசர் தங்களைக் கூப்பிடுகிறாராம்'' என்று சொன்னான்.

* * * * *

'நான் யாருக்கு எதற்காகப் பயப்படவேண்டும்'? நான் இழைத்த குற்றந்தான் என்ன? நியாயம் என் பக்கத்திலிருக்கையில் தெய்வம் ஒருநாளும் என்னைக் கைவிடாது, என்று தெருவோடு செல்பவர்களுள் ஒருவன் மற்றவனைப் பார்த்து சொல்லிக்கொண்டு போனான்.

'அரசே, அதோ அந்த வாய்ச் சொல்லைக் கேட்டீர்களா'? என்று கூறினான் அமைச்சன்.

மாறன் செழியனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. தான் கேட்பது கனவா, நனவா என்றே மயங்கினான் அவன். அந்த வாய்ச்சொல் அவனது உள்ளக் கிடக்கையை அப்படியே எடுத்துக் காட்டுவது போல இருந்தது.

அதிகாலை, விடிய ஐந்து நாழிகைப் பொழுதிருக்கும். மன்னனும் மந்திரியும் 'பர்க்கத்து விரிச்சி' என்று சொல்லப்படும் அசரீரியான வாய்ச்சொல்லைக் கேட்க வெளிக்கிளம்பினார்கள். ஊர் முழுதும அடங்கிக்கிடக்கும், அந்த வேலையில் ஒன்றிரண்டு பேர்கள் பேசுவது நன்றாகக் கேட்டது. அந்த வாய்ச்சொல் செழியன் தீர்மானத்தை உறுதிப்படுத்தியது.

அது வரையில் அவன் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவன் எவ்விதம் முடிவு செய்வது என்னும் வகையறியாமல் தவித்துக்கொண்டிருந்தான். போரால் நாட்டு மக்களுக்கு நேரிடக் கூடிய இன்னல்களையும இடுக்கண்களையும் சிந்தித்து மனம புழுங்கினான். போர் தொடுப்பதை நிவர்த்திக்க முடியுமா என்று பல படியாக ஆராய்ந்து பார்த்தான்.

உலகத்திலே மானிடராகப் பிறந்தவர்களுக்கு மானம் பெரிதேயன்றிப் பிராணன் பெரிதாகாது; அதனையே லட்சியமாகக் கொண்டு அரசு செலுத்திவந்த செழியன் தன் கௌரவத்தை இழக்கச் சம்மதிக்கவில்லை. ஆனால் யுத்தம் செய்வதால் நாட்டின் அமைதி குலைந்து வறுமை மிகுந்து மக்கள் அழிந்துபோவதைக் காண அவன் விரும்பவில்லை.

யவனர்கள் தமிழ்நாட்டின்மீது படையெடுத்து வருகிறார்கள் என்ற செய்தி காட்டுத் தீபோல நாட்டின் பலபாகங்களிலும பரவிவிட்டது எங்கே பார்த்தாலும் அதே பேச்சாகத்தான் இருந்தது. படையெடுப்பை எதிர்த்து வெற்றி கொள்வதற்குக் குடி மக்களுள் ஒவ்வொருவரும் தயாராக இருந்தனர்.

அரசரும் அவனைச் சுற்றியிருந்த அமைச்சர்களும் படைத் தலைவர்களும் கவலை கொண்டு இருந்தார்களேயன்றி, நாட்டு மக்கள் அவ்விதம் இல்லை. சென்ற இரண்டு தினங்களாக ஐம்பேராயத்தாரும் ஐம்பெருங்குழுவினரும கூடிக்கூடி ஆலோசனை செய்தனர். அவ்வப்போது அரசனும் உடனிருந்து தன் அபிப்பிராயத்தையும் தெரிவித்தான்.

தங்கள் மீது யவனர்கள் படையெடுத்து வருவதற்குத் தாங்கள் இழைத்த தவறு என்னவென்பதே தமிழர்களுக்குத் தெரியாது. முதலில் அவர்கள் படையெடுத்து வரும் செய்தியே தெரியாது.

அந்தச் செய்தியை முதன் முதலாகக் கொணர்ந்தவன் நாகன். இந்த வருஷம் அந்தோனியாவுக்கு உடல் நலம் இன்மையால் சாத்தன் கப்பலுக்குப் போகவில்லை, தனக்குப் பதிலாக நாகனையே அனுப்பி வைத்திருந்தான். சாத்தன் நாகன் அலெக்ஜாந்திரியாவில் இருக்கும் காலத்தில் யவனர்கள் தமிழர்களுடன் போர் தொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதையறிந்தான்.

அந்தச் செய்தியைச் சாத்தனிடம் பாண்டிய மன்னன் மாறன் செழியனிடமும் தெரிவிப்பதற்காக அவன் சீக்கிரமாகத் திரும்பிவிட்டான். ஏன், அலெக்ஜாந்திரியாவினின்றும் தமிழ்நாடு நோக்கிப் புறப்பட்ட படகுகளுள் நாகனுடைய படகே முதலாவதாகும்.

யவனர்கள் அப்போது தங்கள் மரக்கலங்களை அலெக்ஜாந்திரியாவின் துறைமுகத்தில் சேகரித்துக்கொண்டிருந்தார்கள். யவனப் போர் வீரர்களும் தமிழ்நாடு புறப்படுவதற்காகத் தங்கள் தங்கள் தலைவர்களுடன் அங்கே வந்து கூடிவிட்டனர்.

அவர்கள் புறப்படுவதற்கு இன்னும் பதினைந்து தினங்களாவது ஆகும் என்பதை நாகன் நிச்சயம் செய்து கொண்டான். அன்றி அவர்கள் புறப்பட்டாலும் சாதாரண வியாபாரிகளை விடப் போர்க் கலங்கள் கடலில் மிதந்து பிரயாணம் செய்வதற்குச் சிறிது கால தாமதம் நேரிடும். எப்படியும் யவன வீரர்கள் வருவதற்கு ஒரு மாத காலத்துக்கு முன்னரே அவன் தமிழ்நாடு சென்று செய்தியை அறிவித்துவிட முடியும். படையெடுப்பைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அந்த ஒரு மாத காலம் போதாதுதான். எனினும் திடீரென்று அவர்கள் வந்து தாக்கிய பிறகு தெரிந்துகொள்வதைக் காட்டிலும் ஒரு மாதம் முன்னதாகத் தெரிந்துகொள்வதில் எவ்வளவோ நன்மைகள் உண்டு.

அண்டியோகஸ் தலைமையில் யவனர்கள் யுத்தத்துக்குக் கிளம்பியதன் உண்மைக் காரணத்தை நாகன் ஊகித்துக்கொண்டுவிட்டான். அந்தச் செய்தியையும் அவன் மெல்லச் சாத்தன் காதில் போட்டு வைத்தான். இந்த மர்மங்கள் சம்பந்தப்பட்ட சிலருக்கேயன்றி நாட்டு மக்களுள் ஒருவருக்கும் தெரியா.

தமிழ்நாட்டு வியாபாரத்தில் அநீதமான சில உரிமைகளை வேண்டிய யவனர்கள் போருக்கு எழுந்தனர் என்பதே யாவரும் அறிந்த செய்தி. தமிழ்நாட்டில் மட்டுமன்றி யவன தேசத்திலும் அதேபோலத்தான்.

மக்களின் மனோ தத்துவங்களுள் யுத்தத்தைப் பற்றியது தனியானது. போரிடும் இரு தரத்தாரும் தாங்கள் தர்மத்தைக் கொண்டே போர் புரிவதாகக் கூறிக்கொள்வர். போர் வீரர்களிடையே அந்த மனப்பான்மை இல்லாவிடில் வெற்றி கிட்டாது. ஆயினும் போரின் வெற்றி தோல்வி முதலில் எந்தப் பக்கத்திலே சாய்ந்தாலும் முடிவிலே வெற்றி, தர்மத்துக்காக் சண்டை செய்யும் கட்சியையே அடையும் இதனை மக்களுக்குப் புறம்பான தெய்வ சக்தி என்று வேண்டுமானாலும் கூறலாம். உண்மையில் அது மக்களின் ஆத்ம சக்தியே.

தவிர, ஒவ்வொரு கட்சியின் திறனும் அதற்குத் தலைமை வகித்து நடத்தும் தலைவனைப் பொறுத்ததாக ஆகின்றது. அவன் உத்தரவுகளை ஏற்று அவற்றைச் செய்து முடிக்கும் வீரர்கள் பலர் இருந்தாலும், அவற்றைச் சமயம் அறிந்து அளிக்கும் திறமை தலைவனுடையதே. அவன் நன்மை தீமையைப் பெரிதும் போரின் முடிவாய்ப் பாதிக்கப்படுவதாக இருந்தால், யுத்தத்தில் அவன் காட்டும் தீரத்தையும் எப்படியாவது வெற்றி கூற வேண்டும் என்று முனைந்து நிற்கும் அவன் உழைப்பையும் விவரித்துக் கூறமுடியாது. யவனர்களுக்குத் தலைவனாக வந்த அண்டியோகஸைப்போலவே பாண்டியப் படைக்குச் சாத்தன் தகுதி வாய்ந்தவன்.

தனக்கு அனுகூலமான வாய்ச்சொல்லைக் கேட்ட பிறகு மாறன் செழியன் சிறிதும் தாமதம் செய்யவில்லை. அஞ்சா நெஞ்சம் வாய்ந்த போர் வீரர்களைக் கொண்ட போதிய படை வலிமையும் செலவுக்கு முட்டுப்பாடின்றிச் சேமித்து வைக்கப்பட்டிருந்த தேவையான பொன்னும் உணவுப் பொருள்களும் இருக்கையில் அவன் எதற்காகக் கவலை கொள்ள வேண்டும்?

ஜோதிடம வல்லார் கிரஹநிலையைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். நிமித்தகர்கள் சகுனத்தை அறிந்தனர். யாவும மன்னனுக்கு வெற்றி நிச்சயமாகக் கிட்டும் என்பதைத் தெரிவித்தன.

பாண்டிய சேனைக்குத் தலைமை பூண்டு அதனை நடத்திச் செல்லும் அதிகாரியின் நியமனமே பாக்கி. அதனைத் தீர்மானிக்கவே மன்னன சாத்தனை வரவழைத்தான்.

நடுச்சபையில் சாத்தனுக்கு மன்னன் வெற்றிலையும் அடைக்காயும எடுத்து வழங்கினான். அது உயர்ந்த சன்மானம: மன்னன் அவனிடம் வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டியது. படைத் தலைமையை ஏற்ற அவன் அன்று முதல் மன்னனுக்குச் சமமான அந்தஸ்தைப் பெற்றுவிட்டான் என்பதையெடுத்துக் காட்டியது. கிடைத்தற்கரிய பெருமைபெற்ற சாத்தன் தன் நன்றியைத் தெரிவிக்கும் வகையறியாது மௌனமாக நின்றான். (தொடரும்)

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.
குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

அநுஸூயாவின் வியாதி

1

அநுஸூயாவின் நீலக் கருவிழிகள் தணல் போல் சிவந்திருந்தன. அவள் தன்னுடைய ஹாஸ்டல் அறையில் தனியாகத் தானிருந்தாள். மேஜைமீது கிடந்த கடிதமே அவளது கோபத்திற்குக் காரணம்.

அவளுடைய தந்தை அவளுக்கு எழுதியிருந்த கடிதம் அது. அதில் வேறொன்றும் எழுதியிருக்கவில்லை.

"தஞ்சை

அநுஸூயா,

கோடை விடுமுறை ஆரம்பமாகும் அன்றே இங்குவரப் புறப்பட்டு விடு. நீ எழுதியிருந்தபடி சென்னையிலேயே தங்க வேண்டாம். உனக்குத் தகுந்த இடமாகப் பார்த்து விவாகம் செய்ய நிச்சயித்துள்ளேன். பணமும் இன்று உனக்குக் கிடைத்திருக்கலாம்.

இப்படிக்கு
உன் பிரியமுள்ள
வாசுதேவய்யர்"

—இது தான் அவளுடைய கோபத்திற்குக் காரணமாயிருந்த விஷயம். ஒன்றும் அறியாது அவள் கைகளைத் தாங்கிக் கொண்டிருந்த மேஜை அவளது கையால் இரண்டு அறைகள் வாங்கிக்கொண்டன. அதன்மேலிருந்த சாமான்கள் அவள் அடித்ததும் பயத்தினால் எழும்பி கடகட வென்று சப்தமிட்டன. "முட்டாள் ஜன்மங்கள்!" என்று அவள் வாய் ஒரு தடவை முணுமுணுத்தது. பிறகு ஆவேசத்துடன் எழுந்து ஒரு கடிதம் எழுதினாள்.

"சென்னை
.........42

அன்புள்ள தந்தைக்கு.

நீங்கள் எனக்கு விவாகம் செய்ய நிச்சயித்துள்ளதைத் தெரிந்து கொண்டேன். பாரதி வாழ்ந்த நூற்றாண்டு இது. இருளிடையே நிலவுபோல் பல அறிஞர்கள் தோன்றியிருக்கும் காலம் இது. ஹதர் காலமில்லை! அந்நாளில் பெண்கள் கைப்பொம்மைகளாக இருந்தார்கள். தன் வாழ்நாள் முழுதும் ஒருவனோடு சுக துக்கங்களைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டிய ஒரு பெண் தனக்கு விருப்பமுள்ள ஒருவனைத்தேர்ந்தெடுக்க உரிமையிருக்க வேண்டாமா?

அநுஸூயா.

குறிப்பு:—மேலும் நான் கலியாணமே செய்துகொள்ளப் போகிறதில்லை."

அதற்கு அவளுக்குக் கிடைத்த பதில்:

"தஞ்சை,
...42.

அநுஸூயா,

நெருப்புத் துண்டு அழகாயிருக்கிறது என்று குழந்தை அதைச் சாப்பிடவேண்டுமெனப் பிடிவாதம் செய்தால் ஒரு தந்தை எடுத்துக் கொடுத்துவிட முடியுமா? அக்குழந்தைக்கு ஒத்துக்கொள்ளக் கூடியதும் பிரியமானதும் ஒரு தந்தைக்குத் தெரிந்திருக்கும் என்பதை என் பெண் அறிந்துகொள்வாள் என்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
வாசுதேவய்யர்.

குறிப்பு:—உனக்கு வயது பத்தொன்பதாகிறது என்பதை ஞாபகமூட்டுகிறேன்"

அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. பெண்களின் முன்னேற்றத்தில் பற்றுதல் கொண்ட தன் தந்தையா இப்படி எழுதுகிறார் என்று நினைக்கும்போதே அவளுக்குப் பின்னும் கோபம் வந்தது. உதடுகள் துடிததன.

2

அநுஸூயா மெடிகல் காலேஜில் படிக்கும் இரண்டாவது வருஷத்து மாணவி. அங்கு ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த நாற்பத்தைந்து மாணவிகளுள் அவள தான் சிறந்த அழகு வாய்ந்தவள். கொஞ்ச நாட்களுக்குமுன் அவளுடைய வாழ்நாளில் முக்கியம் என நினைக்கும் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது.

ஒரு சமயம் கல்லூரி மாணவர் சபைக் கூட்டம் நடைபெற்றது. ஜயராமன் என்ற அழகும் புத்தி கூர்மையும் நிறைந்துள்ள வாலிபன் தலைமை வகித்தான். அன்று மாணவிகள் சார்பில் அநுஸூயா பிரசங்கம் செய்தாள். நல்ல கவர்ச்சியான நடையில் உயர்தரமான கருத்தைக் கொண்ட ஒரு விஷயத்தை வெகு அழகாகப் பேசினாள். அதில் அவன் தன் மனத்தைப் பறி கொடுத்துவிட்டது அவளுக்கே நன்கு தெரிந்திருந்தது. ஏனென்றால் அதற்கு முன்பெல்லாம் அவன் வகுப்பில் ஒருவரையும் திரும்பிக்கூட பார்ப்பது வழக்கமில்லை. பெண்களிடம் மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்ளும்சுபாவம் உடையவன் என்று எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் அன்றைய தினம் அநுஸூயா பேசுகையில் அநேகம் தடவை அவளைக் கனிவுடனும் ஆச்சரியத்துடனும் பார்த்துப் பிரமித்து விட்டான். இவ்வளவு நாளும் அவளைக் கவனித்துப் பார்க்காமல் இருந்தது எவ்வளவு துர்ப்பாக்கியம் என்று கூட அவன் எண்ணியிருக்க வேண்டும். அதன் பிறகு அவன் அவளிடம் அன்பாகப் பேசவாரம்பித்தான்.

அவன் வகுப்புக்குக் கொஞ்சம் தாமதித்து வந்தாலும், அப்படி வருபவன் வந்ததும உடனே அவளைப் பார்த்து லேசாகப் புன்னகை செய்யாமலிருந்துவிட்டாலும், ஐயோ, அவள் படும் வேதனையைச் சொல்ல முடியாது.

ஆனல் அவனும் அவள் அப்படியெல்லாம் அவள்தைப்படும் படியாக விடுவதில்லை. வகுப்பு முடிந்து வீட்டிற்குப் போகும் போது அவள் வெளியில் வந்து சேரும் வரை ஏதாவது ஒரு காரணத்தைச் சாக்கிட்டேனும் நின்று கொண்டிருப்பான். ஒன்று கால் 'பூட்ஸ்' அப்போது தான் சரியாகப் பொருந்தியிருக்காதது தெரிய வரும்; இல்லாவிட்டால் ஏதாயினும் காணுமலாவது போயிருக்கும்; அவன் மந்தஹாஸத்துடன் குதூகலமாய் நடந்து வருவான். அவள் ஹாஸ்டலுக்குப் போய்ச் சேரும் வரை பேசிக் கொண்டு போய் விட்டு விட்ட பிறகு தான் தன் னிருப்பிடம் செல்வான்.

இப்படி வளர்ந்து கொண்டிருந்த அவள் பிரேமை உச்ச நிலையை அடைந்திருந்தது. தான் ஒருக்கால் கலியாணம் செய்து கொள்வதாயிருந்தால் அவனையோ அவனைப் போன்ற வாலிபனையோ தான் செய்து கொள்வது, இல்லா விட்டால் கன்னிகையாகவேயிருந்து விடுவது என்று திட சங்கல்பம் செய்து கொண்டாள்.

அவளுடைய தந்தைக்கு அவள் செல்லப் பெண் என்பதில் சந்தேகமில்லை. அவருக்குப் பிள்ளையும் அவள் தான்; பெண்ணும் அவள் தான். கலியாண விஷயத்தில் ஊரிலிருக்கும் அவர் அவளைக் கேட்காமல் நிச்சயித்திருப்பது அவளுடைய கோபத்தைக் கிளறி விட்டிருந்தது. தன் மனத்திலிருக்கும் எண்ணத்தை அவள் தன் தந்தைக்குத் தெரிவித்து விடுவதில் அவளுக்குப் பயம் ஒன்றும் கிடையாது. எவ்வளவு தான் பிரியமாயிருந்தாலும் ஒரு பெண் எப்படி தன் எண்ணத்தை உடனே சொல்லிவிட முடியும்?

ஜயராமன் வேண்டுகோளினாலோ, ஏதனாலோ விடு முறைக்கு ஊருக்குச் செல்ல அவள் விரும்பவில்லை. அதை அவள் தந்தைக்கு எழுதியிருந்தபோது என்ன நினைத்துக் கொண்டாரோ! பெண்ணிற்கு வயதாகி விட்ட ஞானோதயம் உண்டாயிற்றோ என்னவோ!—திடீரென்று விவாஹத்தை நிச்சயித்துக் கடிதம் எழுதி விட்டார்.

3

அநுஸூயாவின் தகப்பனார் அவளிடம் எவ்வளவுக்கெவ்வளவு பிரியமாயிருந்தாரோ அவ்வளவுக் கவ்வளவு பிடிவாதமும்கண்டிப்பும்உடையவர். அவர்கூறும் யோசனைக்குமாறாக யாரேனும் செய்தால், அது தன் பெண்ணாயிருந்தாலும் சரிதான், தாக்ஷிணியம் பார்க்கவே மாட்டார். அவளுக்கு அந்தப் பயம் சிறிது உண்டு.

"அவர் எழுதியிருக்கும் கடிதங்களில் தன்னம்பிக்கையும் பிடிவாதமும் எப்படிக் கலந்து விளங்குகின்றன? முதற் கடிதத்தில் கூட அப்படியில்லை. இரண்டாவது கடிதத்தில் தான் எவ்வளவு அபத்தம் காணப்படுகிறது? நான் எப்பொழுதாவது தணலைச் சாப்பிடக் கேட்டேனா அவரை? இருக்கட்டும்; சரியான பதில் எழுதுகிறேன்" என்று மறு கடிதம் எழுதினாள். அதில் முக்கியமான பகுதி:

"சென்னை
.........42

அன்புள்ள தந்தைக்கு,

சொஸ்தம் செய்யப் போகுமுன் நோயாளியின் வியாதியைத் தெரிந்துகொள்ளவேண்டும். கலியாணம் செய்து கொள்ளப் போகிறவள் நான். ஆகவே நோயாளியாகிய எனக்கு என்ன வியாதியென்றே அறிந்து கொள்ள முயலாமல், தாங்கள் நோயைத் தீர்க்க முற்பட்டிருப்பது விநோதமாயிருக்கிறது...... விடுமுறை நாட்களின் போது 'காலேஜ் எக்ஸிபிஷன்' இருக்கிறது. நான் இங்கு அவசியம் இருந்தாக வேண்டும்.

அநுஸூயா"

இக்கடிதம் எழுதிப்போட்டவுடன் நிம்மதியாக ஸோபாவில் அப்பாடா என்று சாய்ந்து கொண்டாள். அந்தக் கடிதம் மறுநாள் காலையில் அவருக்குக் கிடைக்கும். அது அவருக்குக் கோபத்தை உண்டாக்குமா அல்லது மனமாற்றத்தை ஏற்படுத்துமா என்பது அவளுக்குப் புரியவில்லை. தன் மனத்திலுள்ள கடுமை யாவையும் அக்கடிதத்தில் பொறிந்துவிட்டதாக அவள் ஞாபகம்!

அவளுடல் வியர்த்துப் புழுக்கம் உண்டாயிற்று. முகம் கழுவி, ஆடைகளை மாற்றி உடுத்திக்கொண்டு உலவிவர எண்ணிப் புறப்பட்டாள். கொஞ்ச தூரம்கூட அவள் போகவில்லை. எதிரில் தன் தந்தை வருவதைக் கண்டதும் அவளுடைய ஸப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. வெறுப்போ திகைப்போ அவள் தன் கண்களைத் திருப்பிக்கொண்டாள்.

"அநுஸூயா! எங்கே கிளம்பி விட்டாய்?" என்று அவள் தந்தை கேட்டவாறு, அவளை அவளுடைய அறைக்கு அழைத்து வந்தார்.

அநுஸூயா. ஒன்றும் பேசவில்லை. அப்பொழுது நடந்து கொள்ளும் விதத்தைப்பற்றி சிந்திக்கவும நேரமில்லை.

"ஜயராமன் என்பது யார் அம்மா?" என்றார் அவர், உடைகளைக்கூட களையாமல்.

திகைத்தாள் அவள். அவள் உடல் லேசாக நடுங்கிற்று. "ஏன்?" என்று கேட்டபடியே அவள் தந்தை கொடுத்த கடிதத்தை வாங்கி வாசிக்க ஆரம்பித்தாள்.

"......வாழ்க்கையில் ஏற்படும் சுக துக்கங்களைப் பெண்கள் ஆண்களோடு பங்கிட்டுக் கொண்டால் போதும். வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பங்கிட்டுக்கொள்ள வர வேண்டியதில்லை......வைத்தியத்தில் விசேஷப் பற்றுதல் இருந்தால் ஒரு நல்ல டாக்டராகப் பார்த்து விவாஹம் செய்து வைத்துவிடுவது நலம். நல்ல டாக்டராய் வரும்வரையில் ஒருவர் விவாஹம் ஆகாதவராயிருப்பாரா என்ற சந்தேகம் தோனறலாம். அப்படி யாராவதிருந்தால் ஒன்று நைஷ்டிக பிரம்மசாரியாகவோ அல்லது, இரண்டாந்தார மூன்றாந்தாரக்காரராகவோ தான இருப்பார் என்று உங்கள் பெண் ஆக்ஷேபிக்கலாம். வைத்தியக் கல்லூரி மாணவர்களிலேயே கெட்டிக்காரனாக ஒருவனைப்பார்த்து இவ்வருஷமே விவாஹத்தை முடித்து வைப்பது புத்திசாலித்தனம். பெண்ணுக்குச் செலவழிப்பதைப் பிள்ளையாண்டானுக்குக் செலவிட்டாலும் தகுந்த பலன் கிட்டும். அதிகப் பிரஸங்கித் தனத்திற்கு மன்னிக்கவும்......ஜயராமன்"

—என்றெழுதி யிருந்தது அதில். யோசனை எப்படி?

சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தாள் அதை. எவ்வளவு இங்கிதம் தெரிந்தவன அவன் என்று எண்ணியிருந்தாளோ அதற்கு நேர் மாறாக ஜயராமன் நடந்துகொண்டதில் வெட்கமும் ஆத்திரமும் ஏற்பட்டது அவளுக்கு.

அன்றிரவே பெட்டி படுக்கை சாமான்களைக் கட்டிக்கொண்டு ஊருக்குக் கிளம்பவேண்டுமென்ற கண்டிப்பான உத்திரவிட்டு அவள் தந்தை வெளியில் சென்றபோது அவளுக்கு அழுகைகூட வந்துவிட்டது. "யாரோ எழுதிய கடிதத்திற்காக எனக்கேன் இந்தத் தண்டனை?" என்று தான் அவளுக்குத் தோன்றியது: தந்தையிடம் பதில் பேச அவளுக்கு வாயில்லை. அநுஸூயாவின் எண்ணங்கள் கனவாகிவிட்டன. ரயில வண்டி அவளை நினைவு உலகத்திற்கு கொண்டு வந்து சேர்த்தது.

4

ஒரு மாத காலமாய் வாஸுதேவய்யர் விவாஹத்திற்கான ஏற்பாடுகளை மும்முரமாய் செய்து கொண்டிருந்தார். அநுஸூயாவுக்கு ஒவ்வொரு ஏற்பாடுகளும் உயிருடன் அவளுடலைச் சுட்டெரிப்பது போன்ற உணர்ச்சியை உண்டாக்கின. மாலையிடப் போகும் அவளது கற்பனைக் கணவன் ஒரு பெரிய மிருகம் போலக் காட்சியளித்தான். அத்துடன் நில்லாது கனவில் அடிக்கடி தோன்றி பயங்கரமாய் மிரட்டிக் கொண்டும் இருந்தான். அவளது மெல்லிய சரீரம் உலர்ந்து வாடிற்று.

ஜயராமன் இங்கிதம் தெரியாமல் நடந்து கொண்டதால் ஆண்வர்க்கங்களிலே ஒரு போலித் தோற்றம் தென்படுவது தான் அவளுடைய கண்களுக்குப் புலப்பட்டது. கலியாணம், கணவன், தாம்பத்ய வாழ்க்கை, இவையெல்லாம் சர்ம சுலோகங்களாகக் காதில் ஒலித்தன.

விவாஹத்திற்கு முன் தினம் அவளுக்கு ஒரு பார்ஸலும், கடிதமும் கிடைத்தன. அசிரத்தையாகவே பொழுதைப் போக்கும் எண்ணத்தில் அதைப் பிரித்துப் படித்தாள். கையெழுத்தைப் பார்த்ததுமே ஜயராமன் என்பது தெரிந்து போயிற்று.

"அன்புள்ள அநுஸூயா,

என் மேல் உனக்குக் கோபம் என்று கேள்வியுற்றேன். அது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது......"

மேலே படிக்காமல் கிழிக்க எண்ணினாள். ஆனல் அவள் கண்கள் மேலே படிக்கவாரம்பித்தன.

"புருஷர்களுக்குப் போட்டியிடுவது பெண்மையின் இயல்பு அல்ல; பௌருஷத்தை வளர்ப்பதுதான்......!

எனக்கு விவாஹம் நிச்சயிக்கப்பட்டிருப்பது உன் போன்றவளுக்கு வியப்பாயிருக்கும். நீ என்னை ஒரு சமயம் நேசித்தாய் என்று பெருமையாக எண்ணிக்கொண்டேன். ஆனல் என் லக்ஷிய மங்கை உன்னைவிட சற்று வேறுபட்டிருந்தாள். இப்பொழுது அவள் சமநிலைக்கு இறங்கிவிட்டாள்...என் காதலி ஆம்; அவளைப்போல் எவருக்கும் இந்த உலகில் கிடைத்திருப்பாளா என்பது, சந்தேகந்தான்!

உனக்கும் விவாஹமாம்! உன் லக்ஷிய புருஷன் எப்படிப்பட்டவனோ?

மாப்பிள்ளை பெண்ணுக்குக் கலியாணத்திற்கு முன் பரிசுகள் வழங்கும் வழக்கம் தமிழகத்தில் இது வரை இல்லை......ஆனல் என்னுடைய பரிசு......ஆம்; அந்தப் பார்ஸலில் அனுப்பியிருக்கிறேன்......புதுமை!

விவாஹமான பிறகுகூட தந்தைக்குக் கடிதம் எழுதி படிப்பை நிறுத்தச் செய்த என் மேல் வர்மம் பாராட்டமாட்டாய் என்று நம்புகிறேன். நான் கடிதம் எழுதி உன் படிப்பை நிறுத்தினேன். உண்மை; அதனல் தான் நீ இன்று எனக்குக் கிடைத்தாய். என் படிப்புக்கும் இனி தடையிராது. உனக்கு நான் வேண்டுமா? உன் வைத்தியப் பரீக்ஷையும் அதன் ஒட்டைப் பட்டமும் வேண்டுமா?...

ஜயராமன்"

பார்ஸலில் அடங்கியிருந்தது.

"ஸ்திரீகளுக்கு வேண்டியது பதியா பட்டமா?" என்ற ஒரு புத்தகம்தான்!

அநுஸூயாவின் வியாதி இன்னதென்று வாஸுதேவய்யருக்குத் தெரிந்திருந்தது ஆச்சரியமான விஷயம் தான்!

சிறு கதை
★
வெங்கடராமன்
எழுதியது

சபதம்

நாடகம்

★

வெங்கடரமணம் எழுதியது

நாடக பாத்திரங்கள்:-

★

பரசுராமர்.
அம்பா:-காசிராஜன் புத்திரி,
பீஷ்மர்:-சந்தனுவின் குமாரர்

[பரசுராமர் தன் ஆசிரமத்திலிருக்கிருர். அம்பா அங்கு வருகிருள்.]

அம்பா;-சுவாமி! நமஸ்காரம்.

பரசுராமர்;-குழந்தாய் நீயார்?

அம்பா:—நான் காசிராஜனின் மூத்த பெண் அம்பா.

பரசு:—அரசன் மகளான நீ இங்கு எதற்காக வந்தாய்?

அம்பா:—நானிப்பொழுது அனுதை. என்னைக் காப்பாற்றுவாரெவருமில்லை. திக்கற்றவள்.

பரசு:—ஏன்?...உன் தந்தை எங்கே?

அம்பா:—என் தந்தை சமரில் இறந்தார்......பலாத்காரத்திற்கு இரையானுர்.

பரசு:—உங்கள் குடும்பம் என்னவாயிற்று?

அம்பா:—குடும்பம் சிதறுண்டது....ஏன்?.....நாசமடைந்தது. நானும் என் தங்கைகளும் சிறைபிடிக்கப்பட்டோம். அதில் தப்பி வந்தவள் நானொருவளே.

பரசு:—உங்களைச் சிறைபிடித்தது யார்?

அம்பா:— அவர்தான். தானென்ற மமதையால், தர்மத்தை மறந்து தம்பிக்காகப் பெண்களைச் சிறைபிடிக்கும் மகாபுருஷனுன பீஷ்மர்.

பரசு:—யார்? ...பீஷ்மனு? ... அவன் என் சிஷ்யர்கள் எல்லோரிலும் சிறந்தவனுயிற்றே.

அம்பா:—அதனுல்தான் நான் தங்களிடம் வந்தேன். தங்கள் சிஷ்யர்களுக்குத் தாங்களே நியாயத்தை எடுத்துரைக்க வேண்டும்.

பரசு:—அப்படி அவன்செய்த அதர்மகாரியம் என்ன?

அம்பா:—இப்பொழுது அவர்தான் என் வாழ்வைக் குலைத்தவர். இன்றேல் நானிப்படி நாதனற்றுத் தவிக்கவேண்டியிராது. இது தங்களுக்கு அதர்மமாகத் தோன்றவில்லையா?

பரசு:—குழந்தாய்! ஆத்திரப்படாதே. உன்னை அவன் சிறைபிடிக்கக் காரணமில்லை. உன் தந்தை, தானளித்த வாக்குறுதி எதையேனும் நிறைவேற்றத் தவறியிருக்கலாம்.

அம்பா:—அப்படியொன்றுமில்லை. எனக்கும் என் தங்கைகளான அம்பிகை, அம்பாலிகைகளுக்கும் என் தந்தை சுயம்வரம் ஏற்படுத்தினுர். அதற்கு எல்லா அரசர்களும் விஜயஞ் செய்திருந்தனர். நாங்கள் மூவரும் கைகளில் மாலைகளை ஏந்தி மகிழ்வுடன் நின்ரேம். வாத்தியங்கள் முழங்கின. சுயம்வர மண்டபமே ஆனந்தத்திலாழ்ந்திருந்தது........அச்சமயத்தில் திடீரென்று ஓர் குழப்பமேற்பட்டது.

பரசு:—சுயம்வர மண்டபத்தில் குழப்பமேற்படுவானேன்? வந்திருந்த அரசர்களுக்குள் பகை மூண்டதா?

அம்பா:—இல்லை... சிவபூஜையில் கரடி புகுந்தாற்போல், அச்சமயத்தில் பீஷ்மர் தன் ரதத்தை விட்டிறங்கி சுயம்வர மண்டபத்தில் பிரவேசித்தார், உடனே எங்கள் மூவரையும் சிறைபிடித்து விட்டதாக அறிவித்தார். தன்னைப் போரில் வென்று எங்களைச் சிறை மீட்டுக்கொள்ளுமாறு கூறினுர், அப்பொழுது என் தந்தை அவரைப் பார்த்து, 'ராஜேந்திரா! எண்வகை மணங்களுள் காந்தருவமும், ராக்ஷசமும் க்ஷத்திரியர்களுக்குகந்தது. சுயம்வரத்தில் இங்குள்ள அரசர்களை வென்று தாங்கள் அவர்களை அழைத்துச் செல்வதே உத்தமமான காரியம்' எனக் கூறினுர். ஆனல் செவிடன் காதில் சங்கூதியது போலாயிற்று கதை.

பரசு:—ஏன்? அவன் அறைகூவலை ஏற்றுக்கொள்ள க்ஷத்திரியர்கள் எவரும் முன் வரவில்லையா?

அம்பா:—என் தகப்பனுரே முதலில் ஏற்றுக்கொண்டு முன் வந்தார். ஆனல்...அவரை எதிர்த்துப் போர் புரிந்தவர்களனைவரும் படுகளத்திலேயே மடிந்தனர்.

பரசு:— ஆ!......அப்படியா? சிறை பிடிக்கப்பட்ட உன் தங்கைகளிருவரும் என்னவாயினர்?

அம்பா;—அவர்களிருவருக்கும் விவாகமாகிவிட்டது.

பரசு:—அதென்ன? மூத்தவளாகிய உனக்கு விவாகமாகு முன் அவர்களுக்கெப்படி விவாகமாயிற்று?

அம்பா:—எல்லாம் அந்தப் பீஷ்மர் வேலைதான். அவர்களிருவருக்கும் தானே முன்னின்று விவாகத்தை முடித்து வைத்தார்.

பரசு:—யாருக்கு?

அம்பா:—தன் சகோதரன் விசித்திரவீரியனுக்குத்தான். என்னை இப்படி அனுதையாக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன்தான் அவர் அப்படிச் செய்தார்.

பரசு:—உன்னை மட்டிலும் சிறையினின்று விடுவிக்கக் காரணமென்ன? உன்னையும் அவனுக்கே மணம் செய்வித்திருக்கலாமே?

அம்பா:—ஆம்...அவர் அவ்வாறே கருதியிருந்தார். ஆனல் நான் என்கற்பை இழக்கவிரும்பவில்லை சுவாமி! கற்பிழந்த பின் இருந்தென்ன? இறந்தென்ன?

பரசு:—குழந்தாய், சாஸ்திர விதிப்படி ஒருவரை மணம் புரிந்து கொள்வது எப்படி கற்பிழப்பதாகும்?

அம்பா:—நான் மணம் புரிந்து கொண்டிருந்தால் கற்பிழந்தவளே.

பரசு:—குமாரி! நீ இப்படிக் கூறுவதன் பொருள் விளங்கவில்லையே.

அம்பா:—நான் முதன் முதலில் சாளுவ மன்னனுன தேவவ்ரதனை என் கணவனுக மனதில் வரித்திருந்தேன். அவரை எப்பொழுது காதலித்தேனே அவரே என் கணவர். ஒருவரை வரித்தபின் வேறொருவரை மணம் புரிந்து கொள்வது கற்பிழப்பதாகாதா? அவ்வாறு மணந்தாலும் என்னில் சாந்தமும் சமாதானமும் எப்படி நிலைத்திருக்க முடியும்?

பரசு:—ஆம், நீ கூறுவது முற்றிலும் உண்மையே.

அம்பா,—மஹர்ஷே! நான் இவ்விஷயத்தை அவரிடம் கூறினேன். உடனே அவர் எனக்குத் தக்க மரியாதைகள் செய்து என்னை சாளுவனிடம் போகும்படி அனுப்பிவிட்டார்.

பரசு:—சரி, அப்படியானுல் நீ நேராக சாளுவனிடம் செல். நான் என்னுலான உதவியைச் செய்கிறேன்,

அம்பா:—பிரபு! நான் ஏன் அங்கு போக வேண்டும்? எனக்கு இனி அங்கு என்ன இருக்கிறது? நான் நடந்தது ஒன்றையும் விடாமல் அவரிடம் கூறினேன்.

பரசு:—அவன் அதற்கென்ன சொன்னுன்?

அம்பா;—என்னை ஏற்றுக்கொள்ள முடியாதென மறுத்து விட்டார்.

பரசு:—ஏன்?.........

அம்பா.—என்னைப் பீஷ்மர் சிறைபிடித்த அன்றே நான் கற்பிழந்தவளானேன். பிற ஆடவனுல் அபகரிக்கப்பட்ட என்னைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்ள முடியாதென மறுத்தார். 'நான் செய்த குற்றம் யாது? நான் நிரபராதியல்லவா? தங்களை மனதாரக் காதலித்த என்னை இவ்வாறு துன்பத்தில் மூழ்கடித்து வாழ்க்கை இன்பத்தைக் குலைப்பது நியாயமாகுமா?' என்று அவரிடம் முறையிட்டேன். ஆனல், என் தலைவிதி வேறு விதமாக மாறி விட்டது. நான் என்று சாளுவ மன்னனின் மனைவியாகத் தவறினேனே, அன்றே நான் உலகத்தை இழந்தேன். வாழ்க்கை இன்பங்களை இழந்தேன். துன்பமாகிய இருள் என்னைக் கவ்விக் கொண்டது. மீளா நரகத்தில் வீழ்ந்தேன். இனி எனக்கு விமோசனமில்லை...தற்கொலை... அல்லது...பழிக்குப் பழி. இவையிரண்டிலொன்றுதான் என் மனதிற்குச் சாந்தி யளிக்கும். இன்றேல், நான் உலகத்தை மறக்கத் தாங்கள்தான் வழி காட்ட வேண்டும்.

பரசு:—குமாரி! நீ அஞ்ச வேண்டாம். அந்த சாளுவமன்னனை இங்கு வரவழைத்து உன்னை ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறேன். குழந்தையான உன்னை அவன் ஏற்றுக் கொள்ளாவிடில், இன்றே அவனை சிற கொடிந்த பறவை போலாக்கி விடுகிறேன்.

அம்பா:—சுவாமி! இறந்தாலும், அவர் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டார். (ஆத்திரத்துடன்) என்னை இவ்வாறு நிர்க்கதிக்கு ஆளாக்கி, அனுதையாகச் செய்தவர் பீஷ்மர்தான். என் வாழ்க்கைச் சிதைவுக்கே அவர் தான் மூலகாரணம். அவரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும். இதுவே நான் தங்களிடம் கோரும் வரமாகும். தாங்கள் இதை எனக் களிக்க மறுத்தால், நான் தங்கள் முன்னிலையிலேயே தற்கொலை செய்து கொள்ளுகிறேன்.

பரசு:—குழந்தாய்! அவசரப்படாதே. என்னுடன் வா. நாமிருவரும் பீஷ்மனிடம் சென்று இதற்குத் தக்க பரிகாரம் தேடலாம்.

[பரசுராமரும் அம்பாவும் குருக்ஷேத்திரத்தை அடைகிருர்கள். பீஷ்மர் தம் குருவாகிய பரசுராமரை எதிர்கொண்டழைக்கிருர்.]

பீஷ்மர்:—குருவே! நமஸ்கரிக்கின்றேன். தங்கள் வரவால் நான் தன்யனுனேன். குருக்ஷேத்திரமே புனித மடைந்தது.

பரசுராமர்:—பீஷ்மா! உனக்கு மங்கள முண்டாகுக. உன் சகோதரன், தாய் முதலியோர் சௌக்கியமா?

பீஷ்மர்:—குரு நாதராகிய தங்களருளால்அனைவரும்சுகமே

பரசு:—அப்பா! இன்று உன்னைக்கண்ட என்னுள்ளம் அளவற்ற மகிழ்ச்சியடைகிறது.... ஆம்...நாமிருவரும் சந்தித்து வெகு நாட்களாகின்றதல்லவா?

பீஷ்:—ஆம்......என் தம்பி விசித்திரவீரியன் சிறுவனதலால என் தந்தைக்குப் பின் ராஜ்யத்தை ரக்ஷித்து அவனிடம் ஒப்படைக்கும் பொறுப்பு என்னைச் சார்ந்தது. அதனுல், நான் தங்களைச் சந்திக்க முடியாமலிருக்கிறது.

பரசு:—அதனுலென்ன? நானே உன்னைத்தேடி வரவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது என பாக்கியம் தான்.

பீஷ்:—சுவாமி! தாங்கள் என்னைத்தேடி வரவேண்டிய சந்தர்ப்பமென்ன இருக்கிறது.

பரசு:—இதோ! என் பக்கத்திலிருப்பது யார்?...தெரிகிறதா?

பீஷ்:—ஆம்...அவள் காசிராஜனின் புத்திரி. சாளுவ மன்னர் தேவவிரதரின் மனைவி.

பரசு:—(சிரித்து) அவள் இப்பொழுது தேவவிரதனின் மனைவியல்ல. ஆண்டானற்ற ஓர் அபலை. பதியற்ற பேதை.

பீஷ்:—(திடுக்கிட்டு) ஏன்? சாளுவனையல்லவா மணம் புரிந்து கொள்வதாகக் கூறினுள்? அதனுலன்ரே சிறை பிடிக்கப்பட்டவளையும விடுதலை செய்தேன்!

பரசு:—ஆம், நீ விடுதலை செய்தாய்...உலக இன்பங்களினின்று அவளை விடுவித்தாய்.

பீஷ்:—ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்?

பரசு:—ஆம். அவள் முதலில் வரித்த கணவனையடைய

முடியாமல் செய்தாய். சுயம்வரமண்டபத்தில் அவளை அபகரித்துச் சென்ருய். பிறரால் அவமானிக்கப்பட்ட அவளை சாளுவ மன்னன் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

பீஷ்:—அவன் ஏற்க மறுத்தால், அது என் குற்றமாகுமா? இப்பொழுது என் மீது பழி சுமத்துவதில் பயனென்ன?

பரசு:—நீ பலாத்காரமாக அவளைச் சிறைபிடித்தாய். அவள் இப்படி நிர்க்கதியானதற்குக் காரணம் நீயே. நீதான் இப்பொழுது அவளைச் சமாதானப்படுத்தவேண்டும்.

பீஷ்மர்:—குருதேவா! நான் என்ன செய்வது?

பரசு:—உன் தம்பிக்கே இவளையும் மணம் செய்வித்து விடு. அதுதான் நியாயமும் கூட.

பீஷ்:—சுவாமி! அதெப்படி முடியும்? வேருேர் ஆடவனைக் கணவனுக வரித்த பெண்ணை என் தம்பிக்கு விவாகம் செய்விப்பது தர்ம விரோதமல்லவா?

பரசு:—காங்கேயா! நீ செய்த தவறை இன்னும் உணர்ந்த பாடில்லை. முதலில் நீ அவளை சிறைபிடித்திருக்கக் கூடாது. இப்பொழுது அவளை அனுதையாக்கி விட்டாய், தர்ம நியாயங்களைப் பேசுவதில் பயனில்லை. நான் சொல்லுகிறபடி செய்.

பீஷ்:—சுவாமி! தாங்கள் எனக்கு வில்வித்தை கற்பித்த குரு. நான் தங்களுடைய பிரிய சிஷ்யன். எல்லாம் அறிந்த தாங்கள் இப்படிப் பேசுவது அழகன்று, இனி இவவிஷயத்தில் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. தர்ம விரோதமான காரியங்களில் பிரவேசிக்க எனக்கு விருப்பமில்லை. அது என் கொள்கைக்கே புறம்பானது.

பரசு;—பீஷ்மா! நான் உன் குருவாயிருந்தும் என் வார்த்தைகளை அலட்சியம் செய்கிருய். குருபக்தியுடையவனைப் போல் நடித்து ஏதேதோ பிதற்றுகின்ருய். உன் சூதும், வாதும் நிறைந்த மொழிகளைக் கேட்க நான் விரும்பவில்லை. உன் தம்பிக்கு இவளை விவாகம் செய்வித்துவிடு, இன்றேல் உன் உற்ருர் உறவினர்களுடன் யமனுலகிற் சென்று வாழநேரிடும். என் கோபாக்கினியின் முன் உன் பிடிவாதம் செல்லாது.

பீஷ்:—நான் என்ன குற்றம் செய்தேன்? அகாரணமாக என்னுடன் போர் தொடுப்பது நியாயமல்ல. ஒருவனைக் கணவனுகக் கொண்டவளை மற்ருெருவனுக்கு மணம் செய்விப்பது எப்படித் தருமமாகும்? உலக தர்மத்திற்கு மாருக, தானென்ற மமதையினுல் பைத்தியக்காரத்தினமான காரியங்களைப் புரிய நினைப்பவன் குருவாயிருப்பினும் தண்டிக்கத்தக்கவனே. ஆதலால் நான் தாங்கள் கூறும் இக் காரியத்தைச் செய்வதைவிட தங்கள் கையினுல் இறப்பதே மேலாகும்.

பரசு:—(அத்திரத்துடன்) அடே! குருவையே அவமதித்த மூர்க்கா! நீ குருத்ரோகி! நீ உன் சேனைகளுடன் போருக்கு வந்து சேர்.

பீஷ்:—(கோபத்துடன்) ஐயா! நீர் ஓர் பிராமணர். என் குருநாதர். இவ்விரண்டு எண்ணங்களே என்னை இதுவரை பொறுமையுடனிருக்கச் செய்தன். இப்பொழுது நான் பொறுமையை இழந்தேன். நான் எதிர்த்துப் போரிட்டால் தங்களால் மட்டுமல்ல, இறைவனுலுங்கூட, என்னை வெல்ல முடியாது. முன்பு க்ஷத்திரியர்களையடக்கினேமென்று கர்வங் கொள்ள வேண்டாம். அன்று இந்த பீஷ்மன் பிறக்கவில்லை என்பது ஞாபகத்திலிருக்கட்டும். பீஷ்மன்பிறக்காதவரையில் தாங்களே சர்வாதிகாரியாக நினைத்து க்ஷத்திரியர்களிடையே தங்கள் பேயாட்டமும் நடைபெற்றது. இனி அது முடியாது...நான் தங்களிடம் கற்ற வில்வித்தை ஒன்றே போதுமானது. எனக்குச் சேனைகள் வேண்டாம். தனித்து நின்றே நான் தங்களுடன் போர் புரிகிறேன்.

[இருவருக்கும் போர் நடை பெறுகிறது. இருவரும் மாறி மாறி அஸ்திரங்களைப் பிரயோகித்துக் கொள்கின்றனர். ''பீஷ்மா! உன் குருவை அவமதிப்பது பாபம். வேண்டாம்.'' 'பரசுராமா! பீஷ்மன் உன் குழந்தை. கருணைகாட்டு' என்ற அசரீரி வாக்குகள் கேட்கின்றன. இருவரும் போரை நிறுத்துகின்றனர்.]

பரசு:—பீஷ்மா! போரை நிறுத்து, உன்பக்திக்கும், வல்லமைக்கும் மெச்சினேன். நீ தர்ம மார்க்கத்தை வழுவாதிருப்பதைக் காண என் மனம் குதூகலமடைகிறது, குழந்தாய்! உன் தர்ம தீக்ஷை போற்றத் தக்கது. இன்றே நான் ஓர் உத்தம சிஷ்யனைப் பெற்றேன். (அம்பாவைப் பார்த்து) குமாரி அம்பா! உனக்கு என்னுல் முடிந்த உதவியைச் செய்தேன். பீஷ்மனே தன் பிடிவாதத்தைச் சற்றும் தளர்த்தவில்லை. இனி உன் இஷ்டப்படி செய்யலாம்.

அம்பா:—(பரசுராமரைப் பார்த்து) சுவாமி! தாங்கள் எனக்குச் செய்த பேருதவியை என்றும் மறக்க மாட்டேன். (பீஷமரைப் பார்த்து துக்கமும் ஆத்திரமும் கலந்து) பீஷ்மரே! துராக்ருதமாக என் தந்தையைக் கொன்றீர். அரசைச் சிதைத்தீர். பெண்ணென்றும் பாராது இரக்கமின்றி என்னைச் சிறைபிடித்தீர். வாழ்வைக் குலைத்தீர். கற்பையழித்தீர். என்னைச் சித்திரவதைக் குள்ளாக்கினீர். என்னைக் காதலித்த சாளுவமன்னனின் மனதைக் கலைத்தீர். நீர் பேயைக் காட்டிலும் கடின சித்தமுடையவர். என் மனம் தவிப்பது போல் உங்கள் அரசும் அலையும். பெண்களைத் துன்புறுத்தி சந்தோஷித்தவன் புவியில் ஒருவனுமில்லை. ஆனல் ......பெண்ணுகிய நான் ஒன்று மட்டிலும் கூறுகின்றேன். தவம் புரிந்தேனும் மறு பிறப்பைப் பெற்று என் கையினுல் உங்களைக் கொல்லுகிறேன். கடவுள் சாட்சியாகச் சொல்லுகிறேன்... தங்கள் மரணம் என் கையில்... அப்பொழுதே என் மனம் சாந்தியடையும். இது சத்தியம்... என் சபதத்தை நிறைவேற்றியே தீருவேன். (பூமி குலுங்குகிறது பிரளயக் காலகாற்றும், மழையும் ஹா! ஹா! வென்ற கூச்சல்.)

இருமல், சளி; மார்புக் கோளாறுகளை ஒழியுங்கள்

இருமல், ஜளிப்பு, தொண்டை உபத்திரவங்களால் அவதிப்பட்டால். பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகள் நிச்சய நிவாரணியாகும

வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி சுவாசத்துடன கலந்து, சுவாசப்பைக்குள் செல்லுகின்றது தொத்து கிருமிகளை பெப்ஸ ஒழித்து விடும். சுவாசக் குழாய் அடைப்பை நீக்கி, தொண்டைக்கு சமனமூட்டி பாதுகாக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1. வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி பி. டி. மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உபயோகியுங்கள்.

PEPS

கிருமி சுவாச மாத்திரைகள்

வார்ப்பட இரும்பு தண்ணீர் வளர்ச்சிக்கும் தொட்டிகள்



இந்தியாவில் தயாரிக்கப்படும் மூன்று வித தண்ணீர் தொட்டிகளைப் படத்தில் காணலாம். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிறந்தவைகளுக்குச் சமமானவை.

''டைபூன்'' ''மான்சூன்'', தொட்டிகளில் கொசு பூராது. ஜே.ஸி. எஸ். டபிள்யூ. விதிகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டவை.

''யானை'' மார்க் தொட்டிகள் மலிவானதாயும், திறமையுள்ளதாயும் தேவையென விரும்புவோர்க் கென்றேப் பிரத்யேகமாகத் தயாரிக்கப் பட்டவை.

தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்

12, மிஷன்ரோ, கல்கத்தா.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:

ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.

தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.

ஒரு டாக்டரின் நிப்ந்தனை

ஒரு குஜராத்திக் கதை

"தூமகேது" எழுதியது

கா. ஸ்ரீ. ஸ்ரீ.
மொழிபெயர்த்தது

அப்படியானால், இந்தக் குற்றத்தை நான் செய்ததாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்கிறீர்களா? நீங்கள் என்னை அறிவாளி என்று நினைக்க வில்லையா? நான் கொலையாளி என்று கருதுகிறீர்களா?

நான் கொலையாளி இல்லை, கொலைபாதகன் இல்லை. நான் அறிவாளியே.

அந்த இரவு எனக்கு இப்போது கூட ஞாபகமிருக்கிறது. இரவு பத்து மணி இருக்கும். என் நோயாளிகளில் ஒருவன் சீதபேதியால் வருந்திக் கொண்டிருப்பது எனக்கு எப்படித் தெரியும்? என்னிடம் மொத்தம் எத்தனை நோயாளிகள் இருக்கிறார்கள் என்பது கூட எனக்குத் தெரியாதே. என்னிடம் எத்தனை மருந்து சீசாக்கள் இருக்கின்றன என்பது மட்டும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. எவனிடம் நான் எத்தனை ரூபாய் பெற வேண்டியது பாக்கி என்பது எனக்குக் கரதல பாடம். எந்த நோயாளி எத்தனை ரூபாய் கொடுத்து என்னிடமிருந்து விடுபடுவான் என்பதை அவன் முகத்தைப் பார்த்ததுமே நான் சொல்ல முடியும். வயிற்றுவலி யென்று சொல்லிக்கொண்டு அஹமதாபாத்திலிருந்து ஒரு ஸேட் வந்தானானால், அவனிடம் எப்படிப் பேசினால் நான் என் மனத்துக்கிசைத்தபடி சொல்லும் நோயைப்பற்றி அவனுக்கு நம்பிக்கையுண்டாகும் என்பதும் எனக்குத் தெரியும். 'என்னுடைய எந்த நோயாளிக்கு இப்போது என்ன தேவை?" என்ற ஒரே ஒரு விஷயத்தை மட்டுந்தான் என்னால் சொல்லமுடியாது. நான் என்ன. கிருதயுகத்து அரசனா, எல்லாரையும் கண்காணித்து ரக்ஷிப்பதற்கு? என்னிடம வைத்தியப் புஸ்தகங்கள் இருக்கின்றன; புஸ்தகங்களில் 'பிரிஸ்கிரிப்ஷன்'கள் உள்ளன. நோயாளியிடம் நோய் இருக்கிறது; என்னிடம் மருந்து இருக்கிறது. மருந்தை நோயாளியின் அருகே வைத்தால், ஒரு வேளை மருந்து, நோயாளி ஆகிய இரண்டு பொருள்களுமே நாசமானாலும் ஆகலாம். 'இரண்டில் ஏதாவது ஒன்று தப்பினால் தேவலையே!' என்று எனக்குத்தான் பல தடவைகள் தோன்றுகிறது. நானும் மனிதனே. எனக்கும் ஹ்ருதயம் உண்டு. நோயாளி தப்பவேண்டும் என்று நானுந்தான் விரும்புகிறேன். ஆனால் என் புஸ்தகம் நோயாளியைத் தப்ப வைக்காவிட்டால், அதில் என் குற்றம் என்ன ஐயா இருக்கிறது?

என் நோயாளி சீதபேதியால் வருந்துகிறான் என்பது எனக்குக் காலையில் தெரிந்தது. 'நிலைமை மோசம்' என்று நடுப்பகலில் தெரிந்தது. 'நிலைமை திருந்தாது' என்று சாயங்காலம் தெரிந்தது. நாங்கள் டாக்டர்கள் நாலைந்து பேர்களாய்ச் சேர்ந்து தலையை முட்டிக் கொண்டோம்; ஆனால், ஒருத்தனுக்கு நல்லதென்று படுவது இன்னொருத்தனுக்குக் கெடுதலென்று தோன்றிற்று. ஒருத்தன் சொல்வது மற்றவனுக்குப் பிடிக்கவில்லை. எல்லாருக்கும் ஏக காலத்தில் பிடித்த பொருள் ஒன்று தான்: வெள்ளி நாணயமும், ராஜாத் தலையும்.

நோயாளிக்கு 'இஞ்ஜெக்ஷன்'கள் கொடுத்தோம், சிதம் நின்றது; ஆயினும் அவன் பிழைக்கவில்லை.

இதில் குற்றம் யாருடையது? ஒவ்வொரு 'கேஸை'யும் நிதானமாகவும் அமைதியாகவும் பார்க்க எனக்கு அவகாசம் ஏது? ஜனங்கள் என் ஆத்திரத்தனத்தையே கெட்டிக்காரத்தனம் என்று நினைத்துக்கொண்டால், அதற்கு நானா பிணை? ஜனங்கள் என் 'கார்' எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக ஓடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நான் கைராசிக்காரன் என்று நினைத்தால், அதற்கு நானா ஜவாப்தாரி? நான் வேண்டுமென்றே எவனையாவது கொல்லுகிறேனா!

நானும் மனிதனே. தெரிந்திருந்து வேண்டுமென்றே, நான் எவனையும் சொல்ல முடியாது. நான் எல்லாரையும் காப்பாற்றத்தான் விரும்புகிறேன். ஆனால், ஒவ்வொரு மனிதனிடத்திலும், ஒவ்வொரு விசேஷம் இருப்பது போல ஒவ்வொரு நோயும் பெரும்பாலும் தனக்கென்றே அமைந்த வெவ்வேறு உரு வெளிப்பாடுகளைக் காட்டுகிறது. அந்த நோயைப் பரிசோதிப்பதற்குத் தைரியம் வேண்டும். ஆனால், ஜனங்கள் டஜன்கள் கணக்கிலே நோயாளிகளாய் என்னிடம் வரும்போது, தைரியத்தை அடக்கி வைத்துக் கொள்வது எனக்குக் கஷ்டமாகி விடுகிறது. அதனால்தான் நான் சற்றும் பொறுமையின்றி, ஆத்திரத்தோடு திரிகிறேன். ஜனங்களும் என் மேல் அபாரமான நம்பிக்கை வைக்கிறார்கள். எத்தனையோ சாதாரண நோய்கள் தீர்ந்து குணப்படுகின்றன. சில அசாதாரணமான நோயாளிகள் சாகிறார்கள். இப்படி ஓரிரண்டு அசாதாரணமான நோயின் நுட்பத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு எனக்குப் பொழுது ஏது? என்னிடம் இருக்கிற பொழுதைத்தான் ஜனங்களுக்குப் பங்கிட்டுத் தந்து விடுகிறேனே. இதைவிட் அதிகமாக நான் என்ன ஐயா செய்யமுடியும்?

ஒரு தடவை நான் என் மனைவிக்கு 'இஞ்ஜெக்ஷன்' கொடுத்தேன். என் அறிவின் மீது எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆயினும் பயன் நல்லதாக இல்லை. அதற்கு நான் என்ன செய்வேன்?

ஜனங்கள் நோய்வாய்ப்பட்டால், அதற்கு நான் என்ன செய்வேன்?

ஜனங்களைக் கத்தியினாலோ, துப்பாக்கியினாலோ வெட்டிக் கிழித்துச் சுட்டுக் கொல்ல நான் என்ன, கொலையாளனா?

என் குழந்தையை அறிவின்மையால் சாகடிப்பதற்கு நான் என்ன, ஒரு தொழிலாளியா?

எனக்கு என் அறிவில் அசையா நம்பிக்கை இருக்கத்தான் இருக்கிறது. அந்த அறிவு இருக்கும் போதுகூட, ஒருவன் செத்துப் போனால், அதற்கு நான் என்ன செய்வது?

ஜனங்களிடம் 'மருந்து வாங்க வேண்டாம்' என்று அபிப்பிராயம் சொல்வதற்கு நான் அவ்வளவு முட்டாளல்ல.

ஜுரம் இறங்கியபின்பு பலம் வருவதற்கு என்னால் மருந்து கொடுக்க முடியும், பலம் வந்த பின்பு ஜுரம் வந்தால், ஜுரத்துக்கு மருந்து கொடுப்பேன்.

அப்படிப் பார்க்கப்போனால், பாட்டன்மார் சம்பாதித்த சொத்தை வைத்துக் கொண்டு ராஜபோகங்களும் கேளிக்கைகளும் அநுபவிக்கும் மைனர்கள், வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் நோயாளியாகவே இருக்கிறார்கள். இதற்கு நானா குற்றவாளி?

எனக்குப் பிரியமான இந்த நோயாளிகளையே நான் பெரிதும் கவனிக்க வேண்டியிருக்கும் போது, சாதாரண ஜனங்களோ தொழிலாளிகளோ எதற்காக என்னிடம் ஓடி வருகிறார்கள்? இதற்கு நான் என்ன செய்வேன்?

இந்த மாதிரியான அசந்தர்ப்பத்தில் நான் என்ன செய்ய முடியும்? என்னால் முடிந்த அளவுக்குச் செய்கிறேன். அப்படியிருந்தும் ஜனங்கள் என் கழுத்தை யறுப்பதை விடாவிட்டால், இதில் என் குற்றம் என்ன இருக்கிறது?

வருகிறவர்கள் எல்லாரையும் சுகமாக உட்காரவைத்து, அவர்களோடு வம்பளப்பதற்கு நான் என்ன, ஏதாவது தர்ம சத்திரம் கட்டி வைத்திருக்கிறேனா? எல்லாரிடமும் சமமாகப் பழகுவதற்கு நான் என்ன அன்ன தானசமாஜமா திறந்து வைத்திருக்கிறேன்?

நானும் உங்களைப்போன்றவன்தான். நானும் மனிதன் தான்.

இது வியாபாரமென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். இங்கேயும் வியாபாரம ஏற்றத் குறைவாகத்தான் நடக்கும். ஜனங்களுக்கு இது தெரியவில்லையென்றால், அதற்கு நான் என்ன செய்வது?

நரஸூஸ் டீ காபி
விலையிலும் தரத்திலும் நிகரற்றவை
ருசிக்கு ருசி
விலையும் மலிவு
எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பேனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.
MNK 13 TN

மதனமஞ்சரி
மாத்திரைகள்
மலச்சிக்கல், ஸ்வப்ன ஸ்கலிதம், பலஹீனம், தாது கேடு இவை முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/-.
மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோடு மதராஸ்
புரசவாக்கம்: எஸ். டி. பல்ட ரே...
ஊரிகம்: டி. ஜான்ஸன் & பிரதர்

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரித்ரம் — 18-வது கீர்த்தனம்

பல்லவி

ஹரி ஹரி நீ யொக்க திவ்ய பா-
தார விந்த மிய்யவே

அனுபல்லவி

தரனு கலுகு போக் பாக்ய மெல்லனு
தத்யமுகாது ஸாமீ ஸ்ரீ க்ருஷ்ணு

சரணம்

1. ஸனக ஸனந்தன ஸ்ரீ நாரத சுகார்
ஜுனகனு லெல்ல னும்சு
வனஜ நயன ப்ரஹ்மாதி
ஸங்க்ரந்தமு லனயமு ஸேவிஞ்சு
2. வினு வேத புராணகம சாஸ்த்ர
வித்யலயந்து சரிஞ்சு
கனஸம நீல நிரஞ்சன நிர்குண
கனிகரமுக த்யாகராஜு பாவிஞ்சு

II

ஹரி ஹரி—மகாவிஷ்ணு ஸ்வரூபனான ஸ்ரீ க்ருஷ்ணா!
நீயொக்க—உன்னுடையதான
திவ்ய பாதாரவந்தமு—சிரேஷ்டமான திருவடிகளில் பக் [தியை
இய்யவே—எங்களுக்குக் கொடுத்தருள்வாய்
தரனு கலுகு—இவ்வுலகில் உண்டாகும்
போகபாக்யமு எல்லனு—போக பாக்கியங்களெல்லாம் (சௌக்யங்களெல்லாம்.)
தத்யமுகாது—உண்மையானவை அல்ல என்றறிந்தோம்
க்ருஷ்ண ஸாமி—ஏ கண்ணா! எங்கள் முறையீட்டைக் கேட்டருள்வாய்
ஸனக ஸனந்தன—ஸனகர், ஸனந்தனர், ஸனத்குமாரர் முதலான [மஹரிஷிகளும்
ஸ்ரீ நாரத—நாரத மஹரிஷி
சுக—சுகப்ருஹ்மரிஷி
அர்ஜுன—பாண்டவர்களில் ஒருவனான அர்ஜுனன்
கனுலு எல்ல—முதலான மஹான்கள் எல்லோரும்
நுதிஞ்சு—துதிக்கும்
வனஜ நயன—தாமரைக் கண்ணனே!
ப்ருஹ்ம ஆதி—ப்ருஹ்மன் முதலான ஸகல
ஸங்க்ரந்தமுலு—தேவர்களும்
அனயமு ஸேவிஞ்சு—எப்பொழுதும் தொழுது போற்றும்
திவ்ய பாதார விந்தமிய்யவே—சிரேஷ்டமான உன் திருவடி [களில் பக்தியை எங்களுக்கு கொடுத்தருள்வாய்.
கனஸம நீல!—நீருண்ட மேகம் போன்ற திருமேனியை உடை- [யவனே!
நிரஞ்சன நிர்குண!—தோஷங்கள் அற்றவனே!
வேத புராண ஆகம சாஸ்த்ர வித்யல யந்து—வேதாகம புராண [சாஸ்திரங்கள் எல்லாவற்றிலும்
சரிஞ்சு—உட்பொருளாகக் காணப்படும் பரம்பொருளாயும்
கனிகரமுக—சந்தோஷத்தோடு
த்யாகராஜு பாவிஞ்சு—த்யாகராஜனால் த்யானிக்கப்படு [பவனுமான ஏ க்ருஷ்ணா!
வினு—எங்கள் முறையீட்டைக் கேட்பாய்!
நீயொக்க—உன்னுடையதான
திவ்ய பாதார விந்தமு—சிரேஷ்டமான திருவடிகளில் உண் [மையான பக்தியை
இய்யவே—எங்களுக்கு கொடுத்தருள்வாய்!

III

முன்கதைச்சுருக்கம்:—

ஒரு சமயம் கோபிகைகள் கண்ணனுடன் யமுனையில் ஓடத்திலேறி மிகுந்த குதூகலத்துடன் பொழுது போக்க, அதன் விளைவால் கோபியர்களுக்கு ஏற்பட்ட கர்வத்தை அடக்கி தன்னிடம் உண்மையான பக்தி உண்டாகுமாறு செய்ய, கண்ணன் ஓர் திருவிளையாடல் புரிந்தான்.

அவருடைய ப்ரேரணையால் கடுமையான புயல் காற்றும் மழையும் உண்டாகி, ஓடமும் யமுனையில் மூழ்க ஆரம்பிக்கவே, கோபியர்கள் மதிமயங்கி கண்ணன் கூறிய வண்ணம தங்கள் ஆடைகளை ஓடத்தின் துவாரத்தில் அடைத்தும் யாதொரு பயனும் ஏற்படாது போனதால் மிகுந்த கலவரமடைந்து, தங்கள் கர்வத்தை விட்டொழித்தவர்களாய் பரமாத்மாவான கண்ணனை சரணடைந்து. தங்களை ரக்ஷித்தருளுமாறு பிரார்த்தித்தனர்.

ஹரி ஹரி:—இது நௌகா சரித்திரத்தின் 18-வது கீர்த்தனம். கோபியர்கள் கண்ணனுடைய உண்மை ஸ்வரூபத்தை அறிந்து அவன் திருவடிகளில் பணிந்து வேண்டிக் கொள்வது இக்கீர்த்தனத்தில் கூறப்பட்டுள்ளது.

தரனு கலுகு:—"எந்த கோபாக"—"நின்னே நெர நம்மினானுரா" முதலான கீர்த்தனங்களிலும் இதுபோன்றே தெரிவித்துள்ளார்.

சனகசநந்தன:—"மோஹன ராம" என்ற கீர்த்தனத்தின் சரணத்தில் இது போன்றே கூறப்பட்டுள்ளது.

நினு வேத புராண:—"நாதஸுதா ரஸம் பிலனு." "நீ தயராவலெகாக" என்ற கீர்த்தனங்களின் அனுபல்லவியைப் பார்க்க.

IV

ராகம் அஸாவேரி — ஆதி தாளம்

(8-வது மேள ஜன்யம். ஆ. ஸரிமபதஸ. அவ. ஸ்நிஸ் பதப மபமரி காரிஸ.)

பல்லவி

; ரிரி	மரி மா	பா	பா	பா	தநி
ஹரி	ஹரி நீ	யொக்	க	திவ்	ய .
தப பமா	ப்தப	பம	மரி	கக	ரிஸ
பா . தா .	ரவிந் .	த .	மிய் .	ய .	வே .
; ரிரி	கரி ஸா	ஸா	ஸா	ரிநி	.ஸா
ஹரி	ஹரி நீ	யொக்	க	திவ் .	ய
ஸா ரிம	ரிம பநி	தப	மம	மரி	கக
பா தா .	. ரவிந் .	. த	மிய்	ய .	வே .

.ரிஸ (ஹரி)

அனுபல்லவி

; பம	பா தா	ஸா	ஸா	ஸா	ஸா
தர	னு க	லு	. கு	போ	க
; ரி	க்ரி ரிஸ்	ஸா	ரிநி	ஸா	ஸா
பா .	. க்ய .	மெல்	. .	ல	னு
; பதா	ரிஸா	ஸ்நி	ஸ்ப	பா	பா
த .	த்யமு	கா .	. .	து	ஸா
தநி தா	பா ;	பப	மரி	கக	ரிஸ
மீ . .	.	ஸ்ரீ .	. .		

ஸா (ஹரி ஹரி)

சரணம்

; ரிப	பா பம	மரி	கா	ரீ	ஸா
ஸ ன	க ஸ .	னந்	.	த .	ன
; ரீ	கரி ஸா	ஸா	ரிநி	ஸா	ஸா
ஸ்ரீ	. . நா	ர	த	சு	கார்
; ரிரி	மா ரிம	பா	;	பா	தநி
ஜு ன	கனு .	லெல்	.	.	ல .
தப தா	பத பம	பா	;	பா	;
. . னு	னுஞ் . . .			சு	

(இதற்கு மேல் அனுபல்லவி போன்றது.)

(புன்னாகவராளி ராகத்திலும் இக்கீர்த்தனம் பாடப்படுகின்றது.)

குட்டிக் கதை

இதுவே உலகம்

"ரேவதி" எழுதியது

★ ★

அடுப்பை ஊதுவதை நிறுத்தி விட்டு, பார்வதி உற்றுக் கேட்டாள். ஆமாம்; அது ரவியின் காலோசை தான்! சட்டென்று எழுந்து கூடத்துக்கு வந்தாள்.

"அம்மா! நான்தான் பரீக்ஷையில் முதல் பையன்! எனக்கு ரெண்டு புஸ்தகமும், பத்து ரூபாயும் பரிசு வருமாம். இந்த வருஷம் சம்பளமே கொடுக்க வேண்டாமாம். வாத்தியார் என்னை முதுகில் தட்டினுர் அம்மா! கெட்டிக்காரப்பயல் என்றுர். பாதிச் சம்பளம் கூட இன்னமே கொடுக்க வேண்டாமாம்! உனக்குச் சந்தோஷமாக இல்லையா?" என்று உவகைப் பெருக்கில் மிதந்த ரவீந்திரன் குதூஹலத்துடன் சொன்னுன்.

அவளையும் அறியாமல் கண்களில் மல்கின கண்ணீர், பார்வதியின் பார்வையை மறைத்தது. ரவீந்தரனைக் கட்டி அணைத்து உச்சி நுகர்ந்தாள், "இதைப் பார்க்க உங்க அப்பா இல்லையே!" என்ற சொற்களே அவள் வாயில் முதலில் வந்தன. "என் ஜென்மம் தான் இப்படி நினைச்சு, நினைச்சு அழுவதாயிருக்கு! குழந்தையையும் ஏன் சங்கடப் படுத்தணும்?" என்ற எண்ணம் "தோன்ற, அப்பா ரவி! நீ மஹாராஜனுக இருக்கணம், பரீக்ஷையில் முதல் பையனுகவா வந்தாய்? எனக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருக்கு, கொஞ்சம் உப்புமாக் கிளறி இருக்கேன். கைகாலை அலம்பி விட்டுச் சாப்பிடவா!" என்றுள்.

ரவீந்திரனுக்குச் சற்றுஏமாற்றமாகவே இருந்தது. தன் சந்தோஷ சமாசாரத்தைக் கேட்டுத் தாயார் ஆனந்தக் கூத்தாடுவாள் என்ற ஆவலுடனே வந்தான். அவளது உணர்ச்சிகள் உச்சி ஸ்தாயியை அடைந்து விட்டதே, அவள் அதிகம் பேசாததற்குக் காரணம் என்பது அவன் குழந்தை மனசுக்கு எப்படித் தெரியும்?

ரவீந்திரனுக்கு உப்புமாவைப் பரிமாறினுள் பார்வதி. அவள் மனசு 10 வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவத்தில் லயித்திருந்தது.

அவள் கணவன் மரணப்படுக்கையில் கிடந்தான். யாதும் அறியாத மூன்று வயதுக் குழந்தை ரவி விளையாட்டில் ஈடுபட்டிருந்தான். படுக்கை அருகில், கல்லாய்ச் சமைந்து, பார்வதி உட்கார்ந்திருந்தாள்.

நோயாளி மெதுவாகத் தன் கண்களைத் திறந்தான். பார்வதியைப் பார்த்தான். க்ஷீணமான குரலில் பேசலானுன்.

"பார்வதி, நான் சொல்லுவதை நன்னுக் கேள்! இனிமே நான் பிழைக்கமாட்டேன்! குழந்தை ரவியைக் காப்பாத்து; படிக்கவை. என் லைப்-இன்ஷூரன்ஸ் பணம் இரண்டாயிர ரூபாய் வரும்; பாக்கி எல்லாம இன்னும் இரண்டாயிரம் ரூபாய் தேறும். வீட்டுவாடகை மாசம் பதினைந்து ரூபாய் வரும். இவ்வளவுதான். உன் புத்திசாலித்தனத்தினுல்தான். ரவி படிக்கணம். அண்ணு உதவி செய்யமாட்டான்!" ஆயாசம் மேலிட நோயாளி மௌனமானுன். பார்வதி கண்ணீர் பெருக்கில் மூழ்கினுள்.

"அழாதே பார்வதி நாம் கொடுத்து வைச்சுது இவ்வளவு தான்! பணத்தைக் கண்டவரிடம் கொடுக்காதே! அண்ணுவிடமே கொடு; உதவி செய்ய மாட்டான்; ஆனுல் உயிர் போனுலும் மோசம் செய்ய மாட்டான்; ரவி கெட்டிக்காரன்; நன்னுப் படிக்கவை, தன் பேருக்குத் தக்கபடி உன் இருளைப் போக்குவான், ஒரு ஜோசியன், ரவி பிறந்ததுமே, இந்த ஜாதகன் தன் அந்தஸ்துக்கு மேலாகவே வளர்க்கப்படுவான்; உலக கஷ்டங்களை அனுபவிக்க மாட்டான்' என்று சொல்லி இருக்கான்!" என்று அவள் கணவன் மறுபடியும் சொன்னுன். பார்வதி பெருமூச்சு விட்டாள். இதற்குப் பிறகு அவள் கணவன் அதிக நாள் ஜீவித்திருக்க வில்லை. அவன் சொற்படி சென்ற இந்தப் பத்து வருஷங்களாக அவள் ரவியைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள். இன்னும் சில வருஷங்கள் தான்! பிறகு, ரவி, படித்துப் பாஸ் பண்ணி, பெரிய உத்தியோகம் பார்ப்பான். அவன் தகப்பனுர் சொன்னது மெய்யாகி விடும்.

உப்புமாவைச் சாப்பிட்டுக் கையை அலம்பின ரவி, "அம்மா, நான் விளையாடப் போரேன்!" என்றுன். பார்வதி அவனுடன் வாசல் வரையில் சென்றுள், தன் சிநேகிதனிடம் தன் சந்தோஷ சமாசாரத்தைக் கூற, ரவி தெருவில் ஒரு தாவாகக் குதித்தான். அந்த பிரும்மாண்டமான லாரியும் அதே நிமிஷத்தில் மூலை திரும்பிற்று. தப்புவது முடியாத காரியம்! பார்வதி தன் கண்களை மூடிக் கொண்டாள். "ஓ" என்று ஜனங்கள் போட்ட கூச்சலும், அவள் ஸ்மரணை யற்றுத் தடார் என்று சாய்ந்ததும் ஏககாலத்தில் நடந்தன!

நீதிக் கதைகள்

குடை கிடைத்தது

★

ஸ்ரீ எ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ். எழுதியது

தன்னுடைய சந்தோஷத்தில் தந்தப்பிடி போட்ட குடை ஒன்றை அப்பு பதினைந்து ரூபாய் கொடுத்து வாங்கினுன். அருகிலிருந்த ஒரு சங்கத்தில் அப்பு சேர்ந்துகொண்டான். தன்னுடைய குடையை ஜம்பமாக அந்த சங்கத்திற்கு அப்பு எடுத்துக் கொண்டு போனுன். அந்த சங்கத்தின் அங்கத்தினர்கள் அதைக் கண்டு பிரமித்து போயினர். சிலர் பொருமைப் பட்டனர். சங்கத்தில் சேர்ந்த மூன்றும் நாள் அப்புவின் குடை காணுமற் போயிற்று. அந்த சங்கத்தின் அங்கத்தினர்கள் எவரோ அதைத் திருடிக் கொண்டு போயிருக்க வேண்டுமென்றும், களவென்று குற்றஞ் சாட்டினுல், குடையைத் திருப்பி கொடுக்க மாட்டார்களென்றும் அப்புவுக்கு நன்ருகத் தெரியும். குடை களவு போன தினம் சாயந்திரம், 'தவறுதலாக ஒருவர் என் குடையை எடுத்துக் கொண்டு போயிருந்தாலும் இருக்கக்கூடும். நமது சங்கத்தின் அங்கத்தினர்களெல்லாம் யோக்கியர்கள்; மரியாதையுடன் நடந்து கொள்ளுகிறவர்கள். ஆகவே, கூடிய சீக்கிரத்தில் என்னுடைய குடை, எனக்குக் கிடைத்து விடுமென்பதில் சந்தேகமில்லை' என்று அப்பு சங்கத்தின் அங்கத்தினர் கூடியிருக்கும் போது சொன்னுன். ஆனுல் உன்னுடைய குடையைப் போன்ற குடையே இந்த சங்கத்தின் அங்கத்தினர்களிடமில்லையே. அப்படியிருக்க தவறுதல் ஏற்பட நியாயமில்லையே' என்று ஒரு அங்கத்தினர் சொன்னுர். 'அங்கத்தினர்கள் சாதாரணமாக, குடையை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள். வழக்கம்போல் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு போவார்கள்' என்றுன் அப்பு. 'உன்னுடைய குடையை தவறுதலாக எடுத்துச் செல்ல, குடைகளையுடைய அங்கத்தினர்கள் இவ்விடம் இல்லையே' என்று அப்புவின் சிநேகிதன் சொன்னுன். 'குடைகளைக் கொண்டு வந்தோமோ இல்லையோ என்ற ஞாபகம்கூட சிலருக்கு இருப்பது கஷ்டம். தன்னுடைய குடையைக் கொண்டு வந்ததாக நினைத்துக்கொண்டு ஒரு வேளை என்னுடைய குடையை ஞாபக மறதியாய் ஒருவர் எடுத்துக் கொண்டு போயிருந்தாலும் போயிருக்கக்கூடும்' என்று அப்பு சமாதானம் கூறினுன். அவ்வப்போது அப்பு மேற்கூறியவாறு சொல்லிக்கொண்டு வந்ததனுல் பலன் ஏற்பட்டது. குடையை எடுத்துக்கொண்டு அங்கத்தினர் மெதுவாக குடையைக் கொண்டு வந்து, களவு போன மூன்றும் நாள், மெதுவாக குடைகள் வைக்குமிடத்தில வைத்துவிட்டார். அவரே அப்புவிடம் சென்று, 'நீ சொன்னது வாஸ்தவம். உன்னுடைய குடை, குடைகள் வைக்கப்படுமிடத்தில் இருக்கிறது பார்' என்று சொன்னுர். அப்பு தன் குடையை எடுத்து பத்திரமாக வைத்துக்கொண்டு, 'அது சரி. நீ ஏன் என்னுடைய குடையைத் திருடிக்கொண்டு போனுய்?' என்று அந்த அங்கத்தினரைக் கேட்டான். 'அப்பு நீ, என்ன என்னைத் திருடனென்று சொல்கிருய்? ஞாபக மறதியாகவல்லவோ நான் அதை எடுத்துக் கொண்டு போனேன். நீ கூட இதுவரையில், தவறுதலாக யாரோ அதை எடுத்துச் சென்றிருக்க வேண்டுமென்றல்லவா சொல்லிக்கொண்டிருந்தாய்' என்றூர் அந்த அங்கத்தினர். 'அவை வஸ்து கிடைக்கும் வரையில் பேசிய பேச்சு. இப்போது காணுமற் போன வஸ்து கிடைத்த பிறகு, அதிக சாமர்த்தியத்துடன் குடை திருடப்பட்டதென்றே சொல்ல வேண்டியிருக்கிறது' என்று அப்பு பதிலளித்தான்.

(17-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ. கே.என். கே.டி. அண்டு பிரதர்ஸ்
எலக்ட்ரோ பிளேட்டிங் ஒர்க்ஸ்.
2/52, வால்டாக்ஸ் ரோட், பி. டி. மதராஸ்.

இவ்விடத்தில் சகல விதமான இரும்பு, பித்தளை செம்பு முதலிய சாமான்களுக்கும, ஆஸ்பத்திரி, ரெயில்வே, கட்டிட சாமான்கள் மோட்டார்,

சைகிள், பூட்டு சாவி முதலிய சாமான்களுக்கும் பாலிஷ், நிக்கல், ஸில்வர், ஆக்ஸ்டைஸிங், பிரான்ஸிங், லாக்ரிங், முதலிய வேலைகள்

கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு செய்து கொடுக்கப்படும். ஒரு முறை ஆர்டருக்கு முந்துங்கள்.

கே. துளசிங்க முதலியார்,
மானேஜிங் டைரக்டர்,
(திருச்சி பொன்மலை தென்னிந்திய ரெயில்வே ஒர்க்ஷாப்பில் நற்சாக்ஷி பத்திரம் பெற்றவர்)
KN. KT. & Bros. ELECTRO PLATING WORKS.
2/52, Wall Tax Road, P. T. Madras.

ஜோதிர்மண்டலம்

★

சித்ரபானுஷு கார்த்திகை

★

விசாகம்

ஜோதிஷத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாத ராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

		சனி	
கேது	12௳—விருச்சிக-சுக்கிரன் 6௳— ,, -புதன் 25௳—தனுசு-சுக்கிரன்-புதன் 20—விருச்சிக-குஜன்		குரு
	சூரியன்	குஜன், புதன், சுக்கிரன்	

சென்னையில் இராக்காலத்தில் நமக்குத் தென்படும் நக்ஷத்திரக் கூட்டங்களை இந்தப்பக்கத்திலுள்ள படம் காட்டுகின்றது. படத்திலுள்ளபடியே நக்ஷத்திரங்கள் இம்மாதம் முதல் தேதி (16-11-42) இரவு 11-30 மணிக்கும், 15-ந் தேதி 10-30 மணிக்கும், 29-ம் தேதியன்று 9-34 மணிக்கும் நமக்குக் காணப்படும். படத்தை உபயோகிக்க:—நாம் எந்த திசையை நோக்கி நிற்கிறேமோ அந்தப் பக்கம் அடிப்பாகமாக வரும்படி. படத்தை திருப்பி கீழே வைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது நமக்கு எதிரில் அடிவானம் முதல், உச்சிவரையிலுள்ள நக்ஷத்திரங்கள், படத்தில் அடிக்கோடு முதல் நடுவரை காணப்படும்.

மகரக் கூட்டம்

தனுசுக் கூட்டத்திற்குக் கிழக்கே, ராசி மண்டலத்தில் மகரக் கூட்டத்தைக் காணலாம். இது ஒரு செம்மறியாட்டைக் குறிக்கிறது. இது ஒரு அழகிய கூட்டமல்ல. ஆனுல் இது ராசி மண்டலத்தில் இருப்பதால் அநேகமாக எல்லா தேசத்தார்களும் இக்கூட்டத்தைக் கவனித்து வந்திருக்கின்றனர். அரேபியர்களும் கிரேக்கர்களும், இக்கூட்டத்தின் நக்ஷத்திரங்கள் ஒரு ஆட்டைச் சித்தரிப்பதாகவே கொண்டிருக்கிருர்கள். பாரசீகர்களுக்கும், இந்தியர்களுக்கும்கூட இக்கூட்டம் ஆட்டையே குறிக்கிறது. பண்டைக் காலத்தில் இது தேவர்கள் மாளிகையின் வாயிலாக மேல் நாட்டார் கருதினுர்கள்.

பழைய நக்ஷத்திரச் சித்திரங்களில், இக்கூட்டம் ஒரு கொம்புடைய ஆட்டின் தலையையும், மீனின் வால் பாகத்தை உடைய உடலையும் உள்ள ஒரு பிராணியாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதுமாதிரிச் சித்திரங்கள் பாபிலோனியா நகரக் கோயில்களில் இன்றும் காணலாம். இந்த ஆடு, ஜுபிடர் (குரு) எனும் கிரேக்க தெய்வத்திற்குப் பால் ஊட்டியதாம். அகஸ்டஸ் எனும் பழையகால அரசர், இந்த மண்டலத்தையே தன் நாணயங்களிலுள்ள உருவாகச் செய்தார். அவர் பிறந்தது மகர ராசியிலாம். ஆதலால் அவர் காலத்தில், வருஷ முதலும், மகா மாதத்திலாம்.

இதன் முக்கிய நக்ஷத்திரம். ஒரு இரட்டை நக்ஷத்திரம், இதில் முதல் நக்ஷத்திரம் 1600 ஒளி வருஷங்களுக்கப்பாலிருக்கின்றது. இரண்டாவது 108 ஒளி வருஷங்களுக்கப்பாலிருக்கின்றது. ஆட்டின் தலைப் பாகத்தில், இக்கூட்டத்தின் இரண்டாவதாக உள்ள பிரகாசமான நக்ஷத்திரம் இருக்கிறது. இதன் மூன்றுவது நக்ஷத்திரம் 250 ஒளி வருஷங்களுக்கப்பால் இருக்கிறது. இது நம் சூரியனைவிட சுமார் 95 மடங்கு அதிக ஒளி பொருந்தியது.

கிரஹ நிலை:

புதன்:—மாத முதலில் துலாக் கூட்டத்தில் புதன் இருக்கிறது. 11-ந்தேதியன்று புதன் விருச்சிகத்துக்கு மாறுகிறது. பிறகு, மாத நடுவில் அது விருச்சிகத்தின் முக்கிய நக்ஷத்திரமாகிய கேட்டையின் அருகே இருக்கும். மாதக் கடைசியில் அது தனுசுக் கூட்டத்தை அடைந்து விடுகிறது.

மாத முதலில் புதன் சூரியனுக்கு முன்பே உதயமாகி விடுகிறது. இம்மாதம் 16-ம் தேதியன்று புதன் சூரியனுடனேயே உதயமாகி அஸ்தமிக்கும். பிறகு சூரியனுக்குப் பிறகே அஸ்தமிக்கும். இம்மாதம் 27-ம் தேதியன்று சுக்கிரனருகில் காணப்படும். ஆனுல் இக்காக்ஷி சூரியனின் அந்தி ஒளியில் மழுங்கி விடும்.

சுக்கிரன்:—புதனைப் போலவே சுக்கிரனும் மாத முதலில் துலாக் கூட்டத்திலிருக்கிறது. பிறகு 8-ம் தேதியன்று விருச்சிகத்திற்கு மாறுகிறது. விருச்சிகத்தைக் கடந்து, பாம்பாட்டியின் கூட்டம் வழியாகச்சென்று 28-ம் தேதி யன்று (13-12-42) தனுசுக் கூட்டத்தை சுக்கிரன் அடைகிறது.

மாத முதல் தேதியன்று (16-11-42) சுக்கிரன் சூரியனுடனேயே உதயமாகிறது. அதற்குப் பிறகு சூரியனுக்கப்பால் மறைகிறது. வரும் மாதங்களில் மேல் வானில் முன்னிரவில் மிகவும் அழகுடன் சுக்கிரன் ஜ்வலிக்கும்.

குஜன்:—சென்ற மாதக் கடைசியில் துலாக் கூட்டத்திற்கு மாறிற்று. இம்மாதமெல்லாம் இக்கூட்டத்திலேயே கழிக்கின்றது. கீழ் வானில் சூரிய உதயத்திற்கு முன் குஜனைக் காணலாம்.

குரு மிதுனத்திலும், சனி ரிஷபத்திலும் ஊர்ந்து வருகின்றன. சனி இம்மாதம் 17ம் தேதியன்று சூரியன் அஸ்தமிக்கும் பொழுது உதயமாகிறது. ஆதலால் முன்னிரவில் கீழ்வானில், உயரத்தில் சனியும், கீழே குருவுமாகப் பிரகாசிப்பதைக் காணலாம். இவ்விரு கிரஹங்களும் மற்ற எல்லா நக்ஷத்திரங்களைவிட பிரகாசமானவை.

உரானஸும்நேப்டியூனும்:—முறையே ரிஷபத்திலும். கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன.



அட்டைப் படம்

பிரபல நடிகை

வனமாலா

சீவக சிந்தாமணி-8.

காந்தருவதத்தையின் மணம்

★

—வ. வேணுகோபாலன் எழுதியது—

கந்துக்கடன் அநுமதியை எதிர்பார்த்திருந்த சீவகன் புத்திசேனனைக் கண்டதும் புன்முறுவலுடன் அவனை நோக்கினன். குறிப்பறிந்த புத்திசேனன், கந்துக்கடன் சொல்லியதையும் நாகமாலையின் தோழி வந்து கூறியவற்றையும் விளக்கமாகச் சீவகனிடம் மொழிந்தான் சீவகன் அம்மொழியைக் கேட்டுச் சிரித்து, "நண்பா! கட்டியங்காரன் நம்மை ஒன்றும் செய்யத் துணியான். அவனுல் ஒன்று ஆகாது. நாம் கவலையின்றிச் சென்று வருவோம். ஆயத்தம் செய்க" என்று கூறித் தன்னை ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டான். தன் ஊர்தியாகிய பெண்யானையின் மீது சீவகன் ஏறிப்புறப்பட்டான். அவனைச்சூழ, புத்திசேனன், பதுமுகன், தேவதத்தன் நந்தட்டன், நபுலன், விபுலன் முதலிய தோழரும் தம்பியரும் ஆயுதபாணிகளாக தத்தமக்குரிய யானை மீது ஏறிவந்தனர். இவர்களுக்குப்பின் கந்துக்கடன் ஏவற்படி படைவீரர் நூற்றுவர் ஆயுதங்களுடன் ஊர்திகளிற் சென்றனர், முடிசூடச் செல்லும் அரசகுமாரன் போல் சீவகன் வீதி வழியே சென்ருன்.

காந்தருவதத்தை இருக்கும் மண்டபத்தைச் சீவகன் அடைந்தான். தன்பின்னே வந்த தோழரையும் படைவீரரையும் வெளியே நிறுத்தித் தான் மட்டும் தனியாக மண்டபத்தே ஏறிச் சென்ருன். அவன் பின்னே வீணையை ஏந்தி நபுலன் சென்ருன். மண்டபத்தில் நிறைந்திருந்த மன்னர் முதலியவர் சீவகன் வருவதைக் கண்டதும் ஒதுங்கி வழி விட்டனர். யானைக்கூட்டத்திற் செல்லும் ஆண் சிங்கம் போன்று சீவகன் இறுமாந்து நடந்து சென்ருன். அன்று இசைப்போரின் கடைசி நாளாகையால் யாவரும் நடக்கப் போவதை ஆவலுடன் நோக்கியிருந்தனர். சீவகன் இசைப்போர் செய்ய வந்திருப்பதை நபுலன் வீணாபதியிடம் தெரிவித்தான்.

வீணாபதி காந்தருவதத்தையிடம் அதைக் கூறி அவள் அநுமதி பெற்று, உருவுதிரையை நீக்கினுள். சீவகன் அங்குப் போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து காந்தருவதத்தையை நோக்கினுன். வித்தியாதர மங்கையான காந்தருவதத்தைச் சீவகனைக் கண்டதும் வெட்கி நாணத்தால் தலைகுனிந்தாள்; "இவன் நம்மை வெற்றி கொள்வன்" என்று தன் அறிவாலுணர்ந்தாள்.

சீவகனுடைய இசைக்கலையின் மேம்பாட்டை அறிய எண்ணிய காந்தருவதத்தை நரம்பாலும், மரத்தாலும் குற்றமுடைய வீணைகள் பலவற்றை வீணாபதியிடம் கொடுத்து 'இதன் நன்மை தீமைகளை ஆராய்க என்று சொல்' எனக் கூறினுள்.

சீவகன் வீணாபதியிடமிருந்த ஒவ்வொரு வீணையையும வாங்கிப் பார்த்து, "இது அழுகிய மரத்தாற்செய்யப்பட்டது; இது மெல்லிய மரத்தாற் செய்யப்பட்டது; இது இடியுண்ட மரத்தாற் செய்யப்பட்டது. இது வெம்பிய மரத்தாற்செய்யப்பட்டது. இது நரம்பினிமையில்லாதது. இந் நரம்பில் மயிரும் மண்ணும் உள்ளது" என்று கூறி எல்லாவற்றையும் குற்றமுடையதென்று மொழிந்தான்.

பின்னர், காந்தருவதத்தை உயர்ந்த வீணையொன்றைக் கொடுத்துக் கேட்க, "இது உத்தமமான மரத்தாற் செய்யப்பட்ட சிறந்த வீணை" என்று அதன் வேறுபாடுகளை ஆராய்ந்து சொன்னுன் சீவகன். காந்தருவதத்தை அதைக் கேட்டு நாணமுற்று ஒன்றும் பேசாதிருந்தாள். வீணாபதி முதலிய மகளிர் சீவகன் அழகையும் இசைக் கலைத் தேர்ச்சியையும் பார்த்து ஆச்சரியமுற்று நின்றனர்.

"இனி இம்மங்கை சீவகனுக்குத் தோற்றுவிட்டாள்" என்று சபையினர் ஆரவாரித்தனர்.

"பிரமன், நீண்ட நாள் நினைத்திருந்து அழகு மிக்கவரில் அழகு மிக்கானுகிய ஒருவனைப் படைக்க வேண்டுமென்று நிருமித்தாற் போன்ற இச்சீவகனே இவளுக்குத் தக்க கணவன்" என்று கூறி மகளிர் மகிழ்ந்தனர்.

ஆடவரை எதிர் நோக்காத காந்தருவதத்தையின் கண்கள் சீவகன் திருமேனியில் படிந்து அவன் அழகைப்பருகின. எரிகின்ற மெழுகைப்போல் உள்ள முருகினுள். சீவகனைத் தழுவுவதுநமக்குக்கிடைக்குமோ என்று ஏக்கம் கொண்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் மயக்கம் நீங்கி, தன்னிலையை உணர்ந்து, மனந்தேறி சீவகனை வீணை வாசித்துப் பாடுமாறு வீணாபதியிடம் தெரிவித்தாள். வீணாபதி சீவகனுக்கு அதைக் குறிப்பிக்க, சீவகன் வீணை வாசிக்க ஆயத்தமானுன். தன் தம்பி நபுலனிடமிருந்த வீணையை வாங்கிப் புன்னகையுடன் வாசித்தான். பின் அதற்கேற்ப ஆலாபனம் செய்து பாடினுன். சீவகன் பாட்டைக் கேட்ட யாவரும் அவனது இசையொலியிலே மனமயங்கியிருந்தனர். அவன் பாடலுக்கு உள்ளம் உருகிக் கின்னர மிதுனமும் அசுணப் பறவையும் மண்டபத்தே வந்து தங்கின.

வீணைவித்தகியான வீணாபதியும் காந்தருவதத்தையும் மனம் உருகிக் கண்ணீர் சொரிந்தனர். சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்க பாட்டைச் சீவகன் இனிய குரலில் பாடினுன். அவனது கண்டப்பாடலும் வீணைவாசிப்பும், பருந்தும் நிழலும் போல் ஒன்றியிருந்தன. அந்த மதுர கீதத்தைப்போல் தானும் பாட எண்ணிய காந்தருவதத்தை வீணை வாசித்து அதற்கேற்ப ஆலாபனம் செய்து பாடினுள். காந்தருவதத்தையின் பாட்டும் வீணையொலியும் ஒரு திறமாயிருந்தன். சீவகன் பாடியபாட்டும் வீணையொலியும் வேருெரு திறமாயிருந்தன. அவள் பாட்டு சீவகன் பாட்டிற்குச் சிறிது தாழ்ந்து நின்றது. உடனே காந்தருவதத்தை தான் தோற்றுப்போனமையை யுணர்ந்து அதை வீணாபதிமூலம் சபையினர்க்கு உணர்த்தினுள். தோற்ற பின்பு, சீவகன் முன் உட்கார்ந்திருக்க நாணம் கொண்டு எழுந்து வீணாபதியின் கையிலிருந்த பொன்னரி மாலையை வாங்கிச் சீவகன் கழுத்திலணிந்து அவனை வணங்கி நின்ருள். சீவகன் காந்தருவதத்தையை மணந்தானென்று பலர் மகிழ்ச்சியும் பலர் கோபமும் கொண்டு ஆரவாரம் செய்தனர். உடனே வீணாபதி காந்தருவதத்தைக்கு முன் திரையை வீழ்த்தி மறைத்தாள்.

சீவகன் வீணையாலும் பாட்டாலும் காந்தருவதத்தையை வென்ருனென்று மனமகிழ்ந்து நகரமாந்தர் பேரிரைச்சலோடு புகழ்ந்தனர். அதைக்கண்ட கட்டியங்காரன் மனம் பொருமல் தன் ஆசனத்தை விட்டெழுந்து அங்கிருந்த அரசர்களைப்பார்த்து எச்சரிக்கை செய்தான்.

"அரசர்களே! இது அநியாயம். வணிகன் மகளை அரசன் மணம் புரிதலல்லாமல் அரசன் மகளை வணிகன் மணம்புரிதல் தகாது. வணிகன் மகனுகிய சீவகன் வித்தியாதர மன்னன் மங்கை காந்தருவதத்தையை மணப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தால் அவன் அரசனைப்போல் மதிக்கப்படுவான்; யானும் அவனை அடக்க முடியாமற்போய்விடும். நீங்கள் அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியது தான். ஆதலால் விரைவில் சீவகனை மடக்கிப் போர் செய்யுங்கள். அவனைவென்ற பின், நம்மையெல்லாம் தனித் தனியே உயிர்க்கு அபாயமில்லாமல், நீர் வீசு கருவியால் பொருது வெல்பவன் எவனே அவன் காந்தருவதத்தையை மணக்கட்டும்" என்று கர்ச்சித்தான்.

கட்டியங்காரன் அவ்வாறு கூறக்கேட்ட அரசர் யாவரும் காந்தருவதத்தையிடத்துக் காதலால், சீவகனேடு போர் செய்யப் புறப்பட்டனர். சீவகன் அரசர் செய்கையைக் கண்டு புன்னகை செய்து, நந்தட்டனை ஒரு பக்கமும், சீதத்தன், தேவதத்தன், புத்திசேனன் என்பவரை மூன்று பக்கமும், நபுலனையும் விபுலனையும் இருபக்கமுமாகப் படையை அணிவகுத்துப் போருக்குப் புறப்பட்டான். யானைமீது இருந்த பதுமுகன், பகையரசர்களை நோக்கிச் சாம, பேத, தான, உபாயங்களால் புத்தி கூறி "கட்டியங்காரன் மொழியைக் கேட்டு துன்பத்துக்கு ஆளாக வேண்டாம்" என்று எடுத்துரைத்தான். பகையரசர் யாரும் அதைக் கேளாமல் போர் செய்ய முன் வந்து நின்றனர்.

மண்டபத்திருந்த காந்தருவதத்தை தன்னுல் சீவகனுக்குத்துன்பம் நேரிட்டதே என்று மனங்கலங்கிக் கண்ணீர் விட்டாள். வீணாபதி அவளைத் தேற்றினுள். "உன் கண்ணைப் போன்று கொடிய என் அம்பினுல் பகைவரைக் கொல்லுகிறேன் பார்" என்று சீவகன் காந்தருவதத்தைக்கு ஆறுதல் கூறி அவளைக் காத்திருக்கும்படி பதுமுகனை அங்கே நிறுத்தி விட்டுத் தான் தேர் மீதேறிப் பகைவர் முன் சென்ருன். அவன் பின், நண்பருடன் சீவகன் படைகள் சென்றன. பகைவர் படையும் சீவகன் படையும் மோதித் தாக்கின. வாள்கள் மின்னலைப் போல் மின்னின. குதிரைகள் ஒன்றையொன்று எதிர்த்தன. யானையும் யானையும் பொருதன, வீரரும் வீரரும் வேல் கொண்டு பொருதனர். சீவகன் தன் தேரைக் காற்றுடி போலவும் கொள்ளி வட்டம் போலவும் செலுத்தி நாலாபக்கமும் அம்பு மழையைப் பொழிந்தான். சீவகனைச் சுற்றி அரசர்கள் அம்புகளைச் சொரிந்தனர் நீண்ட நேரம் சீவகனேடு பொருத பகையரசர் முடிவில் அங்கு நிற்கமாட்டாதவராய்ப் புறங்கொடுத்து ஓடினர்.

தோற்றேடும் பகைவரைக் கண்டு சீவகன் நகைத்துக்காந்தருவதத்தையை அழைத்துக்கொண்டு நண்பருடன் சீதத்தன் மனைக்குச்சென்ருன். கந்துக்கடனும் சுநந்தையும் அங்கு வந்தனர். உடனே மணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சீவகனுக்கும் காந்தருவதத்தைக்கும் அஷ்ட வாத்தியங்களும் முழங்கத் திருமணம் நிகழ்ந்தது. இருவரையும் நகர

(14-ம் பக்கம் பார்க்க)

சித்திரமும் சிருங்காரமும்



ஸெஸில் பிடிமெல்

படங்களின் மேன்மை

ஸினிமாத் தொழிலில் முப்பது ஆண்டுகளாக ஈடுபட்டு வந்திருக்கும் ஸெஸில் பி டெமில், சமீபத்தில் பாரமவுண்ட் பிக்சர்ஸாரின் கூட்டத்தில் செய்த பிரசங்கம் மிகவும் முக்கியமானது. அதில் அவர் படப்பிடிப்பு சம்பந்தமாகவும், படங்கள் மூலம் ஏற்படும் லாபங்களையும் தெளிவாக்க் குறிப்பிட்டிருப்பதால், அதன் பகுதிகள் கீழே பிரசுரமாகின்றன.

"வயதானவர்கள் கனவு காண்பார்கள். இளைஞர்களுக்குத் தோற்றங்கள் தோன்றும். இந்தத்தொழில் எப்போதும் இளைஞர்களுக்கு உரித்தானதாகவே இருந்து வந்திருக்கிறது: இந்த உலகமுங்கூட யுவர்களுக்குத்தான். ஆனல் ஒரு விஷயம். நாம் வயசையும் வருஷங்களையும் ஒன்ருக்கக்கூடாது. நாம் யாவரும் யுவர்கள் என்ற எண்ணமும் உணர்ச்சியும் கொள்ள வேண்டும். நாம் புதிய தோற்றங்களைக் கண்டுகொண்டே இருக்க வேண்டும்" அவை உண்மையிலேயே நிகழும்படிச் செய்ய நாம் முனைய வேண்டும்.

"கலக்கம் விளைவிக்கும் தற்காலத்தில் பழைய காலத்தைப் பற்றியும் நினைத்துக்கொண்டே இருப்பதால் பலன் கிடையாது; நாம் புதிய வழிகளைப் பின்பற்ற வேண்டும்: ஆனல் பழைய கொள்கைகளை நாம் புறக்கணிக்க வேண்டும் என்பது இதன் கருத்து அல்ல. இந்த யுத்த காலத்தில் நமது தொழில் மிகவும் முக்கியமானது என்றும், அதிகப் பொறுப்பு நிறைந்தது என்றும் பேசி வருகிருேம்: ஆனல் நம்முள் எவ்வளவு பேர் இத்தொழில் எவ்வளவு உன்னதமான கடமையைச் செலுத்த வேண்டும் என்பதை உணர்ந்திருக்கின்றனர்?

"டச்சுபத்திரிகை யொன்றைச் சேர்ந்த ஒருத்தி, தனக்கு குண்டு மாரியால் அவதியுறும் படேவியாவிலிருந்து தந்தி கிடைத்ததாகவும், அதில் அகடமி கௌரவங்கள் யார் யாருக்கு கிடைத்தன என்பதைத் தெரிவிக்கும்படி கோரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தாள். இதிலிருந்து நாம் முக்கியமாகக் கண்டுகொள்ள வேண்டியது ஒன்று இருக்கிறது. அதாவது பலவித கஷ்டங்களுக்கிடையே வசித்துவரும் மக்கள் ஹாலிவுட்டில் என்ன நடக்கிறது என்பதை அறிய அதிக ஆவலாயிருப்பதுடன், ஹாலிவுட்டிலிருந்து தங்களது பொழுது போக்குக்கான படங்கள் அதிகம் வரும் என்று எதிர்பார்ப்பதும் நன்கு தெரிகிறது: இது நம்தொழிலுக்குப் பெருமையளிப்பதுடன், நமது பொறுப்பையும் பன்மடங்கு பெருக்குகிறது.

"மத்திய காலத்தில் தேசம் மூன்று அங்கங்களாக வகுக்கப்பட்டிருந்தது. அது பாதிரிமார், பிரபுக்கள். பொதுஜனம் என பாகுபாடடைந்திருந்தது. இதற்குப்புறம் எட்மண்ட் பர்க் என்ற பிரபல அரசியல்நிபுணர் பத்திரிகைகளை நான்காவது அங்கமாகச் சேர்த்துக்கொண்டார். இந்தப் பெருமை இதற்கப்புறம் இதற்கு நிரந்தரமாக நிலைத்து விட்டது. இனி நாம் பேசும் படங்களை ஐந்தாம் அங்கம் என நிர்ப்பயமாகக் கருதலாம். ரேடியோவை ஆரும் அங்கமாகக் கூறலாம். பத்திரிகையும், படங்களும் ரேடியோவும் இப்போது மிகவும் முக்கியமானவை. பொதுமக்களுக்கு அவை அதிகஉபயோகமானவை அல்லவா?

"கொடியைத் தாங்குபவர் ஒரு ராணுவத்திற்கு எவ்வளவு ஒத்தாசை புரிகிருரோ, அவ்வளவு பேசும் படமும் பொதுமக்களுக்குப் புரிகிறது. இந்த யுத்த நாளில் லக்ஷியத்தைப் பிரதானமாகக் காட்டி உத்சாகப்படுத்துவது பேசும் படங்களின் பொறுப்பாகும். யுத்தம் நடக்கும் விதத்தைப்பற்றியும், வெளி நாடுகளில் படையெடுப்பினுல் ஏற்படும் பரிதாபங்களையும் எடுத்துக் காட்டுவது படம் தான். யுத்தரங்கத்தில் இருக்கும் ஸோல்ஜருக்கும் தனது ஊரைப் பற்றிய ஞாபகத்தை அடிக்கடி நிலைபெறச் செய்வதும், சுதந்திரத்தின் சிறப்பை சூசிப்பிப்பதும் இந்தப் படங்கள்தான். அமைதியின்றி தவிக்கும் பல நாடுகளுக்கு நாம் பொழுது போக்கு வசதிகளைத் தருகிருேம்.

"இதற்கு மேலும் படங்களால் சாத்தியம், நாட்டு மக்களை ஒன்றுபடுத்துவதற்கும் அவர்களிடை ஐக்கிய பாவம் நிலவுவதற்கும் நாம் தான் வழி காட்ட வேண்டும். இந்தப் படங்கள் மூலம் ஒரு நாட்டு மக்கள் பிற நாட்டு மக்களைப் பற்றியும் அவர்களது பழக்க வழக்கங்களையும் அறிய முடிகிறது. இதனுல் ஒருவரையொருவர் நேசிப்பதுடன் நெருங்கிய தொடர்பு பிறக்கவும் நாம் வழி காண்கிருேம்.

"மனித உணர்ச்சிகள் ஒரே மாதிரியானவை: அதில் வித்தியாசம் இருப்பதில்லை: அவை தான் நமக்கு மூலாதாரணங்கள். நமது தொழிலுக்கு அவை தான் முக்கியமானவை. இதைப் பிரபல ராஜ தந்திரிகளும் அரசியல் நிபுணர்களும் உணர்ந்துள்ளனர். ஹிட்லர், முஸோலினி, கமாசோ முதலியோர் படத் தொழிலுக்குத் தாராளமான ஆதரவு அளிக்க முன் வந்திருப்பதை நாம் மறக்கக் கூடாது: தற்சமயம் நாம் ஒரு புதிய நிலையில் இருக்கிருேம். நாம் இன்னும் அதிக முன்னேற்றம் அடைய வேண்டியிருக்கிறது.

பசிபிக் மஹாநாடு வாஷிங்டனில் நடைபெற்றது. அப்போது எடுத்த படம் இது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் நடுவில் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம். அவருக்குப் பின்னல் லார்ட் ஹாலிபாக்ஸ் நிற்கிருர். இன்னும் இதர நாட்டுப் பிரதிநிதிகளும் இருக்கின்றனர்.

நீதிக் கதை

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

சரியான வழி

யானைக்கால் என்னும் நோயினுல் ஒருவன் அதிக கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய கால்கள் அளவுக்கு மீறிப் பெருத்திருந்தன. கால்கள் உள்பட அவன் இருநூற்று அறுபது பவுன் நிறையுள்ளவனுயிருந்தான். பச்சாதாபம் நிறைந்த இரண்டு வைத்தியர்கள் இலவசமாக அவனுக்கு ரண சிகிச்சை செய்தனர். அவனுடைய நிறை திடீரென்று நூற்றுப் பனிரெண்டு பவுனுகை குறைந்து போய் விட்டது. நூற்று நாற்பத்தெட்டு பவுன் பாரம் திடீரெனக் குறைந்து போகவே, அவன் நிற்பது கஷ்டமாகப் போய்விட்டது. அவனுல் நிற்கவே முடியவில்லை. வைத்தியர்கள், அவன் நிற்கும்படி செய்த முயற்சிகள் பயன் படவில்லை பிறகு ஒரு வைத்தியருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. நூற்று நாற்பத்தெட்டு பவுன் நிறையுள்ள மணல் நிரம்பிய ஒரு பையை அவர்கள், அவன் இடுப்பில் கட்டி விட்டனர். அவன் சாதாரணமாக, எப்போதும் போல் எழுந்திருந்து நின்ருன். அந்தப் பையில் ஒரு ஓட்டையைச் செய்யவே, சிறிது சிறிதாக மணல் கீழே விழுந்து கொண்டிருந்தது. மணல் முழுவதும் கீழே விழுந்த பிறகு, வைத்தியர்கள் பையையும் அவிழ்த்து விட்டனர். அந்த மனிதன் எப்போதும் போல் நின்றுகொண்டிருந்தான்.

சில நாட்களுக்குப் பிறகு, அந்த வைத்தியர் சட்டசபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார், பணக்காரர்களிடமிருக்கும் திரவியத்தில் பாதியைப் பிடுங்கி, ஏழைமக்களின் கல்வி, ஜல வசதி, சுகாதாரம், முதலியவைகளுக்காகச் சிலவு செய்ய, ஒரு மசோதா சட்டசபையில், கொண்டுவரப்பட்டது. அந்த மசோதாவைக் குறித்து சட்டசபையில் விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது, அந்த வைத்தியர், யானைக்கால் மனிதனுடைய கதையை எடுத்துச் சொல்லி பின்வருமாறு தன் பிரசங்கத்தை முடித்தார்; 'ஆகையால், நாம் தேச அபிவிருத்திக்காக கடன் வாங்க வேண்டும். இந்த மசோதாவில் கண்டிருக்கிற பிரகாரம், கடனைப் பணக்காரர்களிடமிருந்தே நாம் பெற வேண்டும். அதைச் சிறிது சிறிதாகத் திருப்பிக் கொடுப்பதற்கு பணக்காரர்களிடமிருந்தே வரி மூலமாகப் பணத்தை வசூலிக்க வேண்டும். பணக்காரர்கள் விஷயத்தில் வரி விகிதத்தை சிறிது சிறிதாக உயர்த்திக்கொண்டே போக வேண்டும். இந்த மாதிரி செய்வதில், பணக்காரர்கள் கொடுத்த கடனை அவர்களே தீர்த்துக்கொண்ட மாதிரி ஆகிவிடும். நிற்க முடியாமல் முதலில் யானைக்கால் மனிதன் அவஸ்தைப்பட்ட மாதிரி, அவர்களும் அவஸ்தைப் படாமல் தங்கள் நிலைமையை உணர்ந்து கொள்வார்கள்,' வைத்தியர் கூறிய உபாயத்தை அனைவரும் ஆமோதித்தனர்.

சென்ற வார நிகழ்ச்சிகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியதரைக்கடல் போர்

மத்தியதரைக் கடலில் எதிரி ஸப்மரீன்கள் மிகத் தீவிரமாக தாக்கி வருவதாகவும் ஆனால் அவைகளுக்குப் பெருஞ்சேதம் விளைந்து வருகிறதென்றும், வட ஆப்பிரிகாவிலுள்ள நேச அதிகாரிகள் அறிவிக்கின்றனர்.

இத்தாலியக் கடற்படையில் பெரும்பாகம் ஜெர்மன் இத்தாலிய விமானங்களின் ஒத்துழைப்புடன் வட ஆப்பிரிக்காவுக்கு அருகே பிரிட்டிஷ்-அமெரிக்கக் கடற்படைகளுடன் போர் நடத்தியதாக மாட்ரிட்டிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. அப்போரில் ஈடுபட்ட இத்தாலியக் கப்பல்களில் பெரும்பாலானவை குருஸர்களும், நாசகாரிகளுமாகும்.

நேச அதிகாரிகள் வசமுள்ள மோராக்கோ ரேடியோ 15-ம் தேதி பின்கண்டவிதம் அறிவித்தது:—

பிஸாடாவுக்கு அருகே நேசப் படைகளுக்கும் ஜெர்மன் துருப்புகளுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. விமான மூலம் ஜெர்மன் துருப்புகளும். கடல் மூலம் இத்தாலியப்படைகளும் டியூனிஸியாவுக்கு வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

எதிரிகள் விமானம் மூலம் டாங்கிகளையும் டியூனிஸியாவுக்குக் கொண்டு வந்து இறக்கி வருகிறார்கள். அங்கு எதிரிகளை பிரஞ்சுக்காரர்கள் எதிர்த்து வருகின்றனர்.

* * * *



துலாகி துறைமுகம்—ஸாலமன் தீவில் நடந்த யுத்தத்தில் அமெரிக்கக் கடற்படை இங்குதான் முதன் முதல் இறங்கியது.

டார்லான் உத்தரவு

வட ஆப்பிரிக்காவிலுள்ள நேசதேச அதிகாரிகளின் தலைமைக் காரியாலய அறிக்கை கூறுவதாவது:—

மொராக்கோ உள்பட்ப் பிரஞ்சு வட ஆப்பிரிக்கா முழுதிலும் உள்ள எல்லா பிரஞ்சு தளகர்த்தர்களும் போரை நிறுத்திவிட வேண்டுமென அட்மிரல் டார்லான் உத்தரவிட்டிருக்கிறார்.

அமெரிக்கத் தளகர்த்தரான ஜெனரல் ஈஸன் ஹோவரின் பிரதிநிதியும் அட்மிரல் டார்லானும் ஆல்ஜியர்ஸில் கலந்துபேசியதன் பேரில் அட்மிரல் டார்லான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

டார்லான் விடுத்த உத்தரவின் சாரம்:—

"நமது பொறுப்புகளை நாம் பூர்த்தி செய்து விட்டோம். மேறகொண்டு போராடுவதில் பிரயோசனமில்லையாதலின், அமெரிக்கா முதலிய நேசப் படைகளுடன் போர் செய்வதை நிறுத்தி தங்களுடைய தளங்களுக்குத் திரும்புமாறும் கண்டிப்பான நடுநிலைமை வகிக்குமாறும் நம் எல்லாப் படைகளுக்கும் உத்தரவிடுகிறேன். வட ஆப்பிரிக்காவில் மார்ஷல் பிடெயினின் சார்பாக நான் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இருதரப்பிலும் உள்ள கைதிகள் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும்.

கஸபிளாங்கா பகுதியில் பிரஞ்சுப் படை சரணடைந்து விட்டது. ஓரானில் அமெரிக்கத் துருப்புகளை ஸ்தல ஜனங்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். வழக்கம்போல் வேலை செய்யுமாறு ஸிவில் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது நேச படைகளை எதிர்த்த எல்லா பிரெஞ்சுக்காரர்களையும் கருணையுடன் நடத்துமாறு அமெரிக்கத் தளகர்த்தர் உத்திரவிட்டிருக்கிறார்.

* * * *

நாஸிப்படைகள் புகுந்தன

இதுவரை நாஸி ஆக்ரமிப்புக்குள்ளாகாத பிரஞ்சு பிரதேசத்திற்குள் முன்னேறுமாறு ஹிட்லர் ஜெர்மன்படைகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக பாரிஸ் ரேடியோ அறிவிக்கிறது.

இம்மாதம் காலை 10 மணிக்கு பல ஜெர்மன் லாரிகள் லியான்ஸ் வழியாகச் சென்றனவென விச்சி ரேடியோ கூறுகிறது.

ஜெர்மன் துருப்புகள் விச்சி பிரான்ஸின் எல்லையை அன்று காலை சலான்ஸ் ஸர்ஸோனுக்கருகே கடந்து லியான்ஸை நோக்கிச் சென்றதாகவும், ஸெயின்ட் ஜெர்மன் என்ற ரயில்வே ஸ்டேஷனுக்கு ஒரு ஜெர்மன் பீரங்கி ரயில் வண்டி வந்து சேர்ந்திருப்பதாகத் தெரிகிறதென்றும் விச்சி செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

ஜெர்மன் துருப்புகள் கான்பான்வுக்கு வடக்கே பிரஞ்சு-ஸ்பானிய எல்லையை அடைந்து விட்டனவென்று ஸ்பெயினிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

ஜெர்மன் துருப்புகளுடன் அதே சமயத்தில் இத்தாலியப் படைகளும் விச்சி பிரான்ஸுக்குள் நுழைந்தனவென்று ரோம் ரேடியோ தெரிவிக்கிறது.

இத்தாலியர் பிரான்ஸுக்குள் நுழைய முயன்றபோது பிரஞ்சு இத்தாலிய எல்லையில் போர் நடந்ததாக விச்சி ரேடியோ தெரிவிக்கிறது.

* * * *



நாஸி நகரங்கள் மீது குண்டு வீச்சு

அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் நாஸியால் கைப்பற்றப்பட்ட பிரான்ஸில் இருக்கும் ருவன் நகரிலிருந்து போக்கு வரத்தை தடுக்க குண்டுகளை வீசின. பகற்காலத்தில் அமெரிக்க விமானங்களும் இராக் காலத்தில் பிரிட்டிஷ் விமானங்களும் கடுமையாகக் குண்டுமாரி பொழிந்தன.

தமிழ் நூல்கள்

சாணக்கிய சாஸ்திரம்	0	4
நவரத்னமாலை	0	10
கலா சேகரன்	1	2
லோகமான்ய திலகர்	0	4
குழந்தைக்கட்டி	1	8
உலகாகசியம்	1	8
அசலாம்பிகை	2	0
இரஞ்சிதமாலா	0	4
ஜகஜ்ஜாலன்	1	12

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

சிறுவர் கதை

எது பெரிது?

கணேசையர்

ஒரு ஊரில் இருவர் இருந்தார்கள். ஒருவனது பெயர் ராமன் மற்றவனது பெயர் குப்பன். ராமன் புஜபல பராக்கிரமம் வாய்ந்தவன், குப்பனோ பலமில்லாதவன். ஒல்லியாக இருப்பான். வாக் சாதுர்யம் வாய்ந்தவன். சமயோசிதமாய் பேசுவதில் வல்லவன். அவர்கள் இருவரும் ஆப்த நண்பர்கள். தீபாவளிப் பண்டிகை நெருங்கி கொண்டே வந்தது. அப்பண்டிகைக்கு உதவ அவர்களுக்கு ஒரு ஆட்டுக்கடா வேண்டி இருந்தது. ஒன்று வாங்க அவர்களிடம் காசில்லை, ஆட்டுக்கடா ஒன்றைத் திருடிக் கொண்டு வரத் தீர்மானித்தார்கள். ஐந்து மைல் தூரத்தில் அரசநல்லூர் என்ற ஒரு கிராமம் இருந்தது. அதில் பல்லவராயன் என்ற ஒரு குடியானவன்இருந்தான். அவனிடம் பல ஆட்டு மந்தைகள் இருந்தன. அவைகளை நஞ்சை புலங்களில் கடை கட்டி இருந்தான். ஒரு அமாவாசை தினம் ராமனும், குப்பனும் அரச நல்லூருக்குச் சென்றார்கள். நள்ளிரவில் ஆட்டு மந்தைகள் இருக்கும் புலங்களுக்குப் போனார்கள். அதில் ஒரு மந்தைக்குள் புகுந்தார்கள்.

ஒரு கொழுத்த ஆட்டுக் கடாவை திருட ராமன் ஆடுகளை ஒவ்வொன்றாக தூக்கித் தூக்கிப் பார்த்துக் கொண்டு வந்து கொண்டிருந்தான். கடைசியாக நன்கு கொழுத்திருந்த ஒரு ஆட்டுக் கடாவை தெரிந்தெடுத்தான். அது வாஸ்தவமான ஆடு அன்று, ஒரு பிசாசு. அது ஆட்டு ரூபமாக அம் மந்தையில் படுத்துக் கொண்டிருந்தது. அந்த விஷயம் ராமனுக்குத் தெரியாது. சாதாரணமான நன்கு கொழுத்த ஆட்டுக் கடா என்றே நினைத்தான். அதை தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு மந்தையை விட்டு வெளியே வந்தான். பிறகு குப்பனுடன் அதி வேகமாக அவனது ஊரை நோக்கி வந்து கொண்டிருந்தான். ஆட்டுக்கடாவாக இருந்த பேய் பயந்து நடுங்கிற்று. ராமனிடமிருந்து தப்பித்துக் கொள்ள பன்முறையும் முயன்றது. அது பிரயோஜனப்படவில்லை. ராமன் மிகுந்த பலசாலி. அதை மிக்க உறுதியாக பிடித்துக் கொண்டிருந்தான். ஆயினும் ஆட்டுக் கடாவின் கனம் அதிகரித்துக் கொண்டே வந்தது. ராமனால் அதைத் தூக்க முடியவில்லை. உடம்பு முழுவதும் வியர்த்து, பயந்து நடுங்கினான். விஷயத்தை மெதுவாகக் குப்பனிடம் கூறினான்.

குப்பனும் தைரியத்தை கை விடாமல் "ராமா! எனக்கொரு விஷயம் தோன்றுகிறது. இந்த ஆட்டுக்கடாவை உயிருடன் நமது ஊருக்குக் கொண்டு போவது தப்பு. நம் திருட்டு வெளியாகி விடும். இங்கேயே கொன்று விட்டு தோலை உரித்து மாமிசத்தை மாத்திரம் கொண்டு போய் விடுவோம்" என்றான். பேயாட்டுக்கடா நடு நடுங்கி மாயமாய் மறைந்து விட்டது: உயிர் தப்பினோம் என்றெண்ணி ராமனும் குப்பனும் வீடு வந்து சேர்ந்தார்கள். தப்பி ஓடின பிசாசு அதன் நண்பர்களிடம் முறையிட்டது. ராமனையும் குப்பனையும் கொன்று விட ஐம்பது பிசாசுகள் வந்தன. ராமன் தூங்கிக் கொண்டிருந்தான். பேய்கள் செய்த சப்தம் அவனை எழுப்பிற்று. கண்களை விழித்துக் கொண்டு பார்த்தான். எங்கு பார்த்தாலும் பிசாசுகள்! மிகவும் பயந்து அருகிலிருந்த குப்பனை அணுகி மெதுவாக தட்டி எழுப்பி விஷயங்களை கூறினான். குப்பனும், தன் மனைவியைப் பார்த்து "குழந்தையை அழ விடாதே, விடிந்ததும் போய் ஆயிரம் பிசாசுகள் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறேன், நீ சமையல் செய்துபோடலாம். அப்பொழுது அதற்கு கால்வயிறுவது நிரம்பும்" என்றான். அதைக் கேட்டதும் பிசாசுகள் நடுங்கி ஓடிவிட்டன.

கோலிக்குண்டு விளையாட்டில் வேடிக்கை இருக்கிறது — ஆனால் அதில் அபாயமுமிருக்கிறது — அழுக்கிலிருந்து

ஒரு ஆர்வமுள்ள கண்—ஒரு உறுதியான விரல்—மேலும் இங்கே கோலி விளையாட்டில் முன்னேறிவரும் ஒரு வீரன். தூசியும், அழுக்கும் நிறைந்துள்ள இடங்களில் இந்த பிரபலமான விளையாட்டை விளையாட வேண்டியிருக்கிறதென்பது என்ன பரிதாபம்! ஏனெனில் அங்கே அழுக்கினால் அபாயமிருக்கிறது.

கிருமிகள் அழுக்கிலிருந்து உற்பத்தியாவதென்பதும், அவைகள் அநேக வியாதிகளுக்குக் காரணமாயிருக்கின்றன என்பதும் உங்களுக்குத் தெரியுமா? உங்கள் டாக்டரிடம், கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்—அவர் உங்களுக்குச் சொல்லுவார்!

கிருமி நாசன லைப்பாயினால் அடிக்கடி முறை தவறாமல் சுத்தம்செய்து கொள்வதின் நிமித்தம் இந்த அபாயத்திலிருந்து காப்பாற்றிக் கொள்வதைப் போல் வேறு சுலபமான வழி இருக்க முடியாதென்றும் அவர் உங்களுக்குச் சொல்வார். இந்தப் பிரபலமான ஸோப்பில் ஆரோக்யத்தைப் பாதுகாக்கக் கூடிய வஸ்து பிரத்யேகமாய் அடங்கி யிருக்கிறது. ஒவ்வொரு கோலி விளையாட்டு வீரனும்—ஆமாம், ஒவ்வொரு ஆரோக்யமான சிறுவனும்-லைப்பாய் முறையை அநுஷ்டித்து வந்தால், அழுக்கினால் ஏற்படும் அபாயத்தைக் குறித்து நீங்கள் சஞ்சலப்பட வேண்டிய அவஸ்யமே இல்லை.

ஒரு நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது

லைப்பாய்

அது ஒரு நல்லவழக்கம்

L. 33—169 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.